**இந்திய அரசு**

**சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்**

सत्यमेव जयते

# பாலியல் குற்றங்களிலிருந்து சிறார்களைப் பாதுகாத்தல் சட்டம், 2012

**(எண் 32/2012)**

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# THE PROTECTION OF CHILDREN FROM SEXUAL OFFENCES ACT, 2012

**(No. 32 of 2012)**

**(As on 31st October, 2023)**

தமிழாக்கம்:

இந்திய அரசுக்காக

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

சென்னை

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

2023

# பாலியல் குற்றங்களிலிருந்து சிறார்களைப்

# பாதுகாத்தல் சட்டம், 2012

(எண் 32/2012)

# THE PROTECTION OF CHILDREN FROM

# SEXUAL OFFENCES ACT, 2012

**(No. 32 of 2012)**

# PREFACE

This edition of the Protection of Children from Sexual Offences Act, 2012 (No.32 of 2012) as on 31st October, 2023, containing the Authoritative Texts of that Act in Tamil and the same was published in the Gazette of the India, Extraordinary, Part XV, section 1, Vol. I dated 13th March, 2021 on Pages from 239 to 270.

The Authoritative Texts in Tamil was published under the authority of the President under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it become the authoritative texts of the Act in Tamil.

New Delhi, *(Signed)……*
13th March, 2021. *Secretary to Government of India.*

# முன்னுரை

2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறுள்ள பாலியல் குற்றங்களிலிருந்து சிறார்களைப் பாதுகாத்தல் சட்டம், 2012 (எண் 32/2012) இன் இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது, இது 2021, மார்ச் 13 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பகுதி XV, பிரிவு 1, தொகுதி I இன் 239 முதல் 270 வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய தமிழ் மொழிபெயர்ப்பு, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 இன் (50/1973) பிரிவு 2 இன் கூறு (அ) வின்படி குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது, அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.

புது தில்லி, (ஒப்பம்)……
13, மார்ச் 2021. இந்திய அரசு செயலாளர்.

# THE PROTECTION OF CHILDREN FROM SEXUAL OFFENCES ACT, 2012

**( No. 32 of 2012)**

## ARRNGEMENT OF SECTIONS


**Sections** **Page No**

## CHAPTER I

### PRELIMINARY

1. Short title, extent and commencement. 2
2. Definitions. 2

## CHAPTER II

### SEXUAL OFFENCES AGAINST CHILDREN

### A. — PENETRATIVE SEXUAL ASSAULT AND PUNISHMENT THEREFOR

3. Penetrative sexual assault. 4
4. Punishment for penetrative sexual assault. 5

### B. — AGGRAVATED PENETRATIVE SEXUAL ASSAULT AND PUNISHMENT THEREFOR

5. Aggravated penetrative sexual assault. 5
6. Punishment for aggravated penetrative sexual assault. 9

### C. — SEXUAL ASSAULT AND PUNISHMENT THEREFOR

7. Sexual assault. 10
8. Punishment for sexual assault. 10

### D. — AGGRAVATED SEXUAL ASSAULT AND PUNISHMENT THEREFOR

9. Aggravated sexual assault. 10
10. Punishment for aggravated sexual assault. 14

### E. — SEXUAL HARASSMENT AND PUNISHMENT THEREFOR

11. Sexual harassment. 14
12. Punishment for sexual harassment. 15

# பாலியல் குற்றங்களிலிருந்து சிறார்களைப் பாதுகாத்தல் சட்டம், 2012

**(எண் 32/2012)**

## பொருளடக்கம்

**பிரிவுகள்** **பக்கம்**


### அத்தியாயம் I

முன்னுரை

1. குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம். 2
2. பொருள் வரையறைகள். 2

### அத்தியாயம் II

சிறார்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள்

(அ). – உட்செலுத்துதல் பாலியல் வன்முறை மற்றும் அதற்கான தண்டனை

3. உட்செலுத்துதல் பாலியல் வன்முறை. 4
4. உட்செலுத்துதல் பாலியல் வன்முறை குற்றத்திற்கான தண்டனை. 5

(ஆ). – கடுமையான உட்செலுத்துதல் பாலியல் வன்முறை மற்றும் அதற்கான தண்டனை

5. கடுமையான உட்செலுத்துதல் பாலியல் வன்முறை. 5
6. கடுமையான உட்செலுத்துதல் பாலியல் வன்முறைக்கான தண்டனை. 9

(இ). – பாலியல் வன்முறை மற்றும் அதற்கான தண்டனை

7. பாலியல் வன்முறை. 10
8. பாலியல் வன்முறைக்கான தண்டனை. 10

(ஈ). – கடுமையான பாலியல் வன்முறை மற்றும் அதற்கான தண்டனை

9. கடுமையான பாலியல் வன்முறை. 10
10. கடுமையான பாலியல் வன்முறைக்கான தண்டனை. 14

(உ.)– பாலியல் தொல்லை மற்றும் அதற்கான தண்டனை

11. பாலியல் தொல்லை. 14
12. பாலியல் தொல்லைக்கான தண்டனை. 15

## CHAPTER III

### USING CHILD FOR PORNOGRAPHIC PURPOSES AND PUNISHMENT THEREFOR


13. Use of child for pornographic purposes. 15

14. Punishment for using child for pornographic purposes. 16

15. Punishment for storage of pornographic material involving child. 16


## CHAPTER IV

### ABETMENT OF AND ATTEMPT TO COMMIT AN OFFENCE


16. Abetment of an offence. 17

17. Punishment for abetment. 18

18. Punishment for attempt to commit an offence. 18


## CHAPTER V

### PROCEDURE FOR REPORTING OF CASES


19. Reporting of offences. 18

20. Obligation of media, studio and photographic facilities to report cases. 20

21. Punishment for failure to report or record a case. 20

22. Punishment for false complaint or false information. 20

23. Procedure for media. 21


## CHAPTER VI

### PROCEDURES FOR RECORDING STATEMENT OF THE CHILD


24. Recording of statement of a child. 21

25. Recording of statement of a child by Magistrate. 22

## அத்தியாயம் III

### இழிபொருள் ஓவியமாக காட்சிப்படுத்தும் நோக்கங்களுக்காக சிறார்களைப் பயன்படுத்துதல் மற்றும் அதற்கான தண்டனை

13. இழிபொருள் ஓவியமாக காட்சிப்படுத்தும் நோக்கங்களுக்காக சிறார்களைப் பயன்படுத்துதல். 15

14. இழிபொருள் ஓவியமாக காட்சிப்படுத்தும் நோக்கங்களுக்காக சிறார்களைப் பயன்படுத்துவதற்கான தண்டனை. 16

15. சிறாரை உட்படுத்தி இழிபொருள் ஓவியமாகக் காட்சிப்படுத்தும் சாதனத்தைச் சேகரித்து வைப்பதற்கான தண்டனை. 16

## அத்தியாயம் IV

### குற்றம் செய்வதற்கு உடந்தையாயிருத்தலும் மற்றும் முயற்சி செய்தலும்

16. குற்றத்திற்கு உடந்தையாயிருத்தல். 17

17. உடந்தையாயிருந்ததற்கான தண்டனை. 18

18. குற்றம் செய்ய முயற்சிப்பதற்கான தண்டனை. 18

## அத்தியாயம் V

### வழக்குகளை அறிக்கை செய்வதற்கான நடைமுறை

19. குற்றங்கள் பற்றி அறிக்கை செய்தல். 18

20. நிகழ்வுகள் பற்றி அறிக்கை செய்வதற்கு ஊடகம், படப்பிடிப்பகம் மற்றும் படமெடுக்கும் வசதியுடைய இட உரிமையாளர்களின் கடமைப் பொறுப்பு. 20

21. அறிக்கை பதிவு செய்யத் தவறுதல் அல்லது வழக்கு பதிவுசெய்ய தவறுதலுக்கான தண்டனை. 20

22. தவறான முறையீட்டிற்கான அல்லது தவறான தகவலுக்கான தண்டனை. 20

23. ஊடகத்திற்கான நடைமுறை. 21

## அத்தியாயம் VI

### சிறாரின் வாக்குமூலத்தைப் பதிவு செய்வதற்கான நடைமுறைகள்

24. சிறாரின் வாக்குமூலத்தைப் பதிவு செய்தல். 21

25. குற்றவியல் நடுவரால் சிறாரின் வாக்குமூலம் பதிவு செய்யப்படுதல். 22

26. Additional provisions regarding statement to be recorded. 22

27. Medical examination of a child. 23

## CHAPTER VII

### SPECIAL COURTS

28. Designation of Special Courts. 23

29. Presumption as to certain offences. 24

30. Presumption of culpable mental state. 24

31. Application of Code of Criminal Procedure, 1973 to proceedings before a Special Court. 24

32. Special Public Prosecutors. 25

## CHAPTER VIII

### PROCEDURE AND POWERS OF SPECIAL COURTS AND RECORDING OF EVIDENCE

33. Procedure and powers of Special Court. 25

34. Procedure in case of commission of offence by child and determination of age by Special Court. 26

35. Period for recording of evidence of child and disposal of case. 27

36. Child not to see accused at the time of testifying. 27

37. Trials to be conducted in camera. 27

38. Assistance of an interpreter or expert while recording evidence of child. 28

## CHAPTER IX

### MISCELLANEOUS

39. Guidelines for child to take assistance of experts, etc. 28

40. Right of child to take assistance of legal practitioner. 28

26. பதிவு செய்யப்பட வேண்டிய வாக்குமூலம் தொடர்பான கூடுதல் வகை முறைகள். 22

27. சிறாருக்கு மருத்துவ ஆய்வு செய்தல். 23

## அத்தியாயம் VII

### சிறப்பு நீதிமன்றங்கள்

28. சிறப்பு நீதிமன்றங்கள் சுட்டியமர்த்தப்படுதல். 23

29. ஒரு சில குற்றங்கள் குறித்த அனுமானம். 24

30. குற்றமுறு மனநிலையின் அனுமானம். 24

31. சிறப்பு நீதிமன்றத்தின் முன்பான நடவடிக்கைகளுக்கு, குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 இன் பொருந்துகை. 24

32. அரசு சிறப்பு குற்றவியல் வழக்குரைஞர்கள். 25

## அத்தியாயம் VIII

### சிறப்பு நீதிமன்றங்களின் நடைமுறை மற்றும் அதிகாரங்கள் மற்றும் சான்றினைப் பதிவு செய்தல்

33. சிறப்பு நீதிமன்றத்தின் நடைமுறை மற்றும் அதிகாரங்கள். 25

34. சிறாரினால் செய்யப்படும் குற்றத்தைப் பொறுத்த வரையிலான நடைமுறை மற்றும் சிறப்பு நீதிமன்றத்தினால் சிறாரின் வயது முடிவு செய்யப்படுதல். 26

35. சிறாரின் சான்றினைப் பதிவு செய்வதற்கான மற்றும் வழக்கை முடித்து வைப்பதற்கான காலஅளவு. 27

36. சாட்சியமளிக்கும் நேரத்தில் சிறார் குற்றம் சுமத்தப்பட்டவரை காணுதல் ஆகாது. 27

37. விசாரணை அந்தரங்கமாக நடத்தப்பட வேண்டும். 27

38. சிறாரின் சான்றினை பதிவு செய்கையில் வாய்வழி மொழி பெயர்ப்பவரின் அல்லது வல்லுநரின் உதவியைப் பெறுதல். 28

## அத்தியாயம் IX

### பல்வகைப்பட்டவை

39. வல்லுநர்கள் முதலியோரின் உதவியைப் பெறுவதற்கு சிறார்களுக்கான வழிகாட்டு நெறிகள். 28

40. சட்டத் தொழிலாற்றுநரின் உதவியைப் பெறுவதற்கு சிறாருக்குரிய உரிமை. 28

41. Provisions of sections 3 to 13 not to apply in certain cases. 28

42. Alternative punishment. 29

42A Act not in derogation of any other law. 29

43. Public awareness about Act. 29

44. Monitoring of implementation of Act. 30

45. Power to make rules. 30

46. Power to remove difficulties. 31

THE SCHEDULE

| | | |
|---|---|---|
| 41. | ஒருசில வழக்குகளில் **3** முதல் **13** வரையுள்ள பிரிவுகளின் வகை முறைகள் பொருந்தாது. | 28 |
| 42. | மாற்று தண்டனை. | 29 |
| 42(அ). | இச்சட்டம், பிற சட்டம் எதனையும் குறைவுறச் செய்தல் ஆகாது. | 29 |
| 43. | பொதுமக்களிடம் சட்டம் பற்றிய விழிப்புணர்வு. | 29 |
| 44. | சட்டம் செயற்படுத்தப்படுவதைக் கண்காணித்தல். | 30 |
| 45. | விதிகளைச் செய்வதற்கு அதிகாரம். | 30 |
| 46. | இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு அதிகாரம். | 31 |
| | இணைப்புப்பட்டியல் | |

# THE PROTECTION OF CHILDREN FROM SEXUAL OFFENCES ACT, 2012

**(No. 32 of 2012)**

[19th June, 2012.]

An Act to protect children from offences of sexual assault, sexual harassment and pornography and provide for establishment of Special Courts for trial of such offences and for matters connected therewith or incidental thereto.

WHEREAS clause (3) of article 15 of the Constitution, *inter alia,* empowers the State to make special provisions for children;

AND WHEREAS, the Government of India has acceded on the 11th December, 1992 to the Convention on the Rights of the Child, adopted by the General Assembly of the United Nations, which has prescribed a set of standards to be followed by all State parties in securing the best interests of the child;

AND WHEREAS it is necessary for the proper development of the child that his or her right to privacy and confidentiality be protected and respected by every person by all means and through all stages of a judicial process involving the child;

AND WHEREAS it is imperative that the law operates in a manner that the best interest and well being of the child are regarded as being of paramount importance at every stage, to ensure the healthy physical, emotional, intellectual and social development of the child;

AND WHEREAS the State parties to the Convention on the Rights of the Child are required to undertake all appropriate national, bilateral and multilateral measures to prevent—

(a) the inducement or coercion of a child to engage in any unlawful sexual activity;

(b) the exploitative use of children in prostitution or other unlawful sexual practices;

(c) the exploitative use of children in pornographic performances and materials;

# பாலியல் குற்றங்களிலிருந்து சிறார்களைப் பாதுகாத்தல் சட்டம், 2012
## (எண் 32/2012)

[2012, ஜீன் 19]

பாலியல் வன்முறை, பாலியல் தொல்லை, இழிபொருள் ஓவியம் காட்டுதல் ஆகிய குற்றங்களிலிருந்து சிறார்களைப் பாதுகாப்பதற்கும், அத்தகைய குற்றங்களை விசாரணை செய்வதற்கான சிறப்பு நீதிமன்றங்களை நிறுவுவதற்காகவும் மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்குச் சார்வுறுவான பொருட்பாடுகளுக்காகவும் வகை செய்வதற்கானதொரு சட்டம்.

அரசமைப்பின் 15 ஆம் உறுப்பின் (3) ஆம் கூறானது, மற்றவைகளுக்கிடையே, சிறார்களுக்கான சிறப்பு வகைமுறைகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரம் அளிப்பதாலும்;

மற்றும் சிறார்களின் மேலான நலன்களை பாதுகாக்கும் வகையில் அனைத்து நாட்டு தரப்பினர்களால் பின்பற்றப்பட வேண்டிய தரங்களின் தொகுதியொன்று ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறார்களின் உரிமைகள் பேரிலான மாநாட்டின் கருத்துக்கள் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் 11 அன்று இந்திய அரசால் இணங்கி ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதாலும்;

மற்றும் சிறார்களின் தனிப்பட்டஉரிமை மற்றும் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படுவதற்கும் மற்றும் அனைத்து வகையிலும் ஒவ்வொரு நபராலும் மதிக்கப்படுவதற்கும் மற்றும் சிறாரை உட்படுத்தும் நீதிமன்ற நடவடிக்கைகளின் அனைத்து நிலைகளிலும் சிறாரை ஈடுபடுத்துவதற்கும் சிறாரின் முறையான மேம்பாட்டிற்காகவும், இது அவசியமானதாக இருப்பதாலும்;

மற்றும் சிறாரின் ஆரோக்கியம், உடல்நலம், மன எழுச்சி, அறிவாற்றல் மற்றும் சமூக மேம்பாட்டினை உறுதிசெய்வதற்கு ஒவ்வொரு நிலையிலும் சிறாரின் மேலான நலன் மற்றும் நல்வாழ்வு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது என்கின்ற முறையில் சட்டத்தின் மூலம் இதனைச் செயல்முறைப்படுத்துவது கட்டாயமானதாக இருப்பதாலும்;

(அ) சட்டத்திற்குப் புறம்பான பாலியல் தொடர்பான நடவடிக்கை எதிலும், சிறாரினை ஈடுபடுத்துவதற்கு, சிறாரைத் தூண்டுவதை அல்லது வலுக்கட்டாயப்படுத்துவதை;

(ஆ) பாலியல் தொழிலில் அல்லது பிற சட்டத்திற்குப் புறம்பான பாலியல் தொடர்பான செயல்களில் சிறார்களைத் தன் நலத்திற்காகப் பயன்படுத்துவதை;

(இ) இழிபொருள் ஓவிய செயல்காட்சிகளில் மற்றும் பொருட்களில் சிறார்களைத் தன்நலத்திற்காகப் பயன்படுத்துவதை;

AND WHEREAS sexual exploitation and sexual abuse of children are heinous crimes and need to be effectively addressed.

BE it enacted by Parliament in the Sixty-third Year of the Republic of India as follows:—

## CHAPTER I

## PRELIMINARY

Short title, extent and commencement.

1. (1) This Act may be called the Protection of Children from Sexual Offences Act, 2012.

(2) It extends to the whole of India, [1]***.

(3) It shall come into force on such date[2] as the Central Government may, by notification in the Official Gazette, appoint.

Definitions.

2. (1) In this Act, unless the context otherwise requires, —

(a) "aggravated penetrative sexual assault" has the same meaning as assigned to it in section 5;

(b) "aggravated sexual assault" has the same meaning as assigned to it in section 9;

(c) "armed forces or security forces" means armed forces of the Union or security forces or police forces, as specified in the Schedule;

1. The words "except the State of Jammu and Kashmir" omitted by Act 34 of 2019, s. 95 and the Fifth Schedule (w.e.f. 31-10-2019).

2. 14th November, 2012, vide notification No. S.O. 2705 (E), dated 9th November, 2012, see Gazette of India Extraordinary, Part II, sec. 3(ii).

தடுப்பதற்கு, சிறார்களின் உரிமைகளுக்கான மாநாட்டு தரப்பினர்கள் தேசிய அளவில் இரண்டு நாடுகள் இணைந்து மற்றும் பல நாடுகள் சேர்ந்து உரிய நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ள வேண்டியதாக இருப்பதாலும்;

மற்றும் சிறார்களை பாலியல் ரீதியாக தன்நலத்திற்காக பயன்படுத்துதல் மற்றும் நெறிதவறிய முறையில் பயன்படுத்துதல் ஆகியவை மிகக் கொடிய குற்றங்களாக இருப்பதால் அவற்றைத் திறம்பட கையாள்வது தேவையானதாக இருப்பதாலும்.

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் நாடாளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:—

## அத்தியாயம் I

### முன்னுரை

1. (1) இந்தச் சட்டம், பாலியல் குற்றங்களிலிருந்து சிறார்களைப் பாதுகாத்தல் சட்டம், 2012 என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும், [1]* * *

(3) இது, மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கையின் வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று[2] செல்லாற்றல் பெறும்.

2. (1) இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,— பொருள் வரையறைகள்.

(அ) ''மிகக்கடுமையான உட்செலுத்துதல் பாலியல் வன்முறை'' என்பது, 5 ஆம் பிரிவில் அதற்கு குறித்தளிக்கப்பட்டுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும்;

(ஆ) ''மிகக்கடுமையான பாலியல் வன்முறை'' என்பது, 9 ஆம் பிரிவில் அதற்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும்;

(இ) ''ஆயுதப்படைகள் அல்லது பாதுகாப்புப் படைகள்'' என்பது, இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான ஒன்றியத்தின் ஆயுதப்படைகள் அல்லது பாதுகாப்புப் படைகள் அல்லது காவற்படைகள் என்று பொருள்படும்;

---

1. சட்ட எண் 34/2019 இன் 95 ஆம் பிரிவு மற்றும் ஐந்தாம் இணைப்புப்பட்டியலால் ''ஜம்மு – காஷ்மீர் மாநிலம் நீங்கலாக'' என்ற சொற்கள், (31–10–2019 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டன.

2. 2012, நவம்பர் 14, 2012 நவம்பர் 9 ஆம் தேதியிட்ட அறிவிக்கை எண் எஸ்.ஓ 2705 (E) ஐக் காண்க, இந்திய அரசிதழ், சிறப்பிதழ், பகுதி II, பிரிவு 3 (ii) ஐப் பார்க்க.

(d) "child" means any person below the age of eighteen years;

[1][(da) "child pornography" means any visual depiction of sexually explicit conduct involving a child which include photograph, video, digital or computer generated image indistinguishable from an actual child and image created, adapted, or modified, but appear to depict a child;]

(e) "domestic relationship" shall have the same meaning as assigned to it in clause (f) of section 2 of the Protection of Women from Domestic Violence Act, 2005; 43/2005.

(f) "penetrative sexual assault" has the same meaning as assigned to it in section 3;

(g) "prescribed" means prescribed by rules made under this Act;

(h) "religious institution" shall have the same meaning as assigned to it in the Religious Institutions (Prevention of Misuse) Act, 1988. 41/1988.

(i) "sexual assault" has the same meaning as assigned to it in section 7;

(j) "sexual harassment" has the same meaning as assigned to it in section 11;

(k) "shared household" means a household where the person charged with the offence lives or has lived at any time in a domestic relationship with the child;

---

1. Ins. by Act 25 of 2019, s. 2 (w.e.f. 16-08-2019).

(ஈ) ''சிறார்'' என்பது, பதினெட்டு வயதிற்குக் கீழேயுள்ள நபர் எவரும், என்று பொருள்படும்;

[1][(ஈ-அ) " சிறாரை இழிபொருள் ஓவியமாக காட்சிப்படுத்துதல்'' என்பது ஓர் உண்மையான சிறாரிலிருந்து வேறுபடுத்திக் காணமுடியாத நிழற்படம், காணொளி, மின்இலக்கமுறை அல்லது கணிணியில் உருவான உருவத்தையும் மற்றும் உருவாக்கப்பட்ட, தழுவி அமைக்கப்பட்ட, அல்லது மாற்றியமைக்கப்பட்ட, ஆனால், ஒரு சிறாரை ஓவியப்படுத்துவதாகத் தோன்றுகிற உருவத்தையும் உள்ளடக்குவதான, ஒரு சிறாரை உட்படுத்துகின்ற வெளிப்படையான பாலியல் நடத்தையைக் காட்சிப்படுத்தும் ஓவியம் எதுவும் என்று பொருள்படும்;]

43/2005. (உ) ''குடும்ப உறவுமுறை'' என்பது, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாத்தல் சட்டம், 2005 இன் 2 ஆம் பிரிவின் (ஊ) கூறில் அதற்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும்;

(ஊ) ''உட்செலுத்துதல் பாலியல் வன்முறை'' என்பது, 3 ஆம் பிரிவில் அதற்கு குறித்தளிக்கப்பட்டுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும்;

(எ) ''வகுத்துரைக்கப்பட்ட'' என்பது, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

41/1988. (ஏ) ''சமய நிறுவனம்'' என்பது, சமய நிறுவனங்கள் (தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும்) சட்டம், 1988 இல் அதற்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும்;

(ஐ) ''பாலியல்வன்முறை'' என்பது, 7 ஆம் பிரிவில் அதற்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும்;

(ஒ) ''பாலியல் தொந்தரவு''என்பது, 11 ஆம் பிரிவில் அதற்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும்;

(ஓ) ''சேர்ந்துவாழுதல்'' என்பது, குற்றம் சாட்டப்பட்ட நபர் எந்த ஒரு காலத்திலும் சிறாருடன் குடும்ப உறவு முறையில் வாழ்ந்த அல்லது வாழ்கின்ற குடும்ப நபர் ஒருவர் என்று பொருள்படும்;

---

1. சட்ட எண் 25/2019 இன் 2 ஆம் பிரிவினால் (16-08-2019 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

(l) "Special Court" means a court designated as such under section 28;

(m) "Special Public Prosecutor" means a Public Prosecutor appointed under section 32.

(2) The words and expressions used herein and not defined but defined in the Indian Penal Code, the Code of Criminal Procedure, 1973, [1][the Juvenile Justice (Care and Protection of Children) Act, 2015] and the Information Technology Act, 2000 shall have the meanings respectively assigned to them in the said Codes or the Acts.

45/1860.
2 /1974.
2 /2016.
21 /2000.

## CHAPTER II

## SEXUAL OFFENCES AGAINST CHILDREN

### A. -- PENETRATIVE SEXUAL ASSAULT AND PUNISHMENT THEREFOR

Penetrative sexual assault.

3. A person is said to commit "penetrative sexual assault" if—

(a) he penetrates his penis, to any extent, into the vagina, mouth, urethra or anus of a child or makes the child to do so with him or any other person; or

(b) he inserts, to any extent, any object or a part of the body, not being the penis, into the vagina, the urethra or anus of the child or makes the child to do so with him or any other person; or

(c) he manipulates any part of the body of the child so as to cause penetration into the vagina, urethra, anus or any part of body of the child or makes the child to do so with him or any other person; or

1. Subs. by s. 2, Act 25 of 2019, for "the Juvenile Justice (Care and Protection of Children) Act, 2000 (56 of 2000)" (w.e.f. 16-08-2019).

(ஔ) ‘‘சிறப்பு நீதிமன்றம்’’ என்பது, 28 ஆம் பிரிவின்படி அத்தகையவாறு சுட்டியமர்த்தப்பட்ட ஒரு நீதிமன்றம் என்று பொருள்படும்;

(க) ‘‘சிறப்புக் குற்றவியல் அரசு வழக்குரைஞர்’’ என்பது, 32 ஆம் பிரிவின்படி பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ள அரசு குற்றவியல் வழக்குரைஞர் என்று பொருள்படும்;

(2) இதில் பயன்படுத்தப்பட்ட மற்றும் பொருள்வரையறை
45/1860. செய்யப்படாத ஆனால், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டம், 1860
2 /1974. இல் குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 இல் [1][இளைஞர்
2 /2016. நீதிச் (சிறார்களைப் பாராமரித்தல் மற்றும் பாதுகாத்தல்) சட்டம், 2015]
21 /2000. மற்றும் தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000 இல் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ள சொற்களும் சொற்றொடர்களும் மேற்சொன்ன தொகுப்புச் சட்டங்களில் அல்லது சட்டங்களில் முறையே அவற்றிற்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.

## அத்தியாயம் II

## சிறார்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள்

### (அ). – உட்செலுத்துதல் பாலியல் வன்முறை மற்றும் அதற்கான தண்டனை

3. நபர் ஒருவர்–

உட்செலுத்துதல் பாலியல் வன்முறை.

(அ) தம்முடைய ஆண்குறியை, எந்த அளவுக்கு சிறாரின் யோனிக்குழாய், வாய், மூத்திரக் குழாய் அல்லது ஆசனவாய்க்குள் உட்செலுத்துவாரானால் அல்லது அவரிடம் அல்லது பிற நபர் எவரிடமும் அந்தச் சிறாரை அவ்வாறு செய்யும்படிச் செய்வாரானால், அல்லது

(ஆ) அவர் எந்த அளவுக்கு பொருள் எதனையும் அல்லது ஆண்குறியாக இராத உடலின் பகுதியை சிறாரின் யோனிக்குழாய், மூத்திரக்குழாய் அல்லது ஆசனவாய்க்குள் நுழைப்பாரானால் அல்லது அவரிடம் அல்லது பிறநபர் எவரிடமும் அந்தச் சிறாரை அவ்வாறு செய்யும்படிச் செய்வாரானால்; அல்லது

(இ) அவர் சிறாரின் உடல் பகுதி எதனையும் சூழ்ச்சித்திறனுடன் கையாண்டு யோனிக்குழாய், மூத்திரக்குழாய், ஆசனவாய்க்குள் அல்லது சிறாரின் உடல் பகுதி எதற்குள்ளும் உட்செலுத்துதலைச் செய்வாரானால் அல்லது அவரிடம் அல்லது பிறநபர் எவரிடமும் அந்தச் சிறாரை அவ்வாறு செய்யும்படிச் செய்வாரானால்; அல்லது

1. சட்ட எண் 25/2019 இன் 2 ஆம் பிரிவினால் ‘‘இளைஞர் நீதிச் (சிறார்களைப் பாராமரித்தல் மற்றும் பாதுகாத்தல்) சட்டம், 2000 (56/2000)’’ என்பதற்கு, மாற்றாக (16–08–2019 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

(d) he applies his mouth to the penis, vagina, anus, urethra of the child or makes the child to do so to such person or any other person.

Punishment for penetrative sexual assault.

4.[1][(1)] Whoever commits penetrative sexual assault shall be punished with imprisonment of either description for a term which shall not be less than [2][ten years] but which may extend to imprisonment for life, and shall also be liable to fine.

[3][(2) Whoever commits penetrative sexual assault on a child below sixteen years of age shall be punished with imprisonment for a term which shall not be less than twenty years, but which may extend to imprisonment for life, which shall mean imprisonment for the remainder of natural life of that person and shall also be liable to fine.

(3). The fine imposed under sub-section (1) shall be just and reasonable and paid to the victim to meet the medical expenses and rehabilitation of such victim.]

**B. — AGGRAVATED PENETRATIVE SEXUAL ASSAULT AND PUNISHMENT THEREFOR**

Aggravated penetrative sexual assault.

5. (a) Whoever, being a police officer, commits penetrative sexual assault on a child —

(i) within the limits of the police station or premises at which he is appointed; or

(ii) in the premises of any station house, whether or not situated in the police station, to which he is appointed; or

(iii) in the course of his duties or otherwise; or

1. Section 4 renumbered as section 4(1) thereof by s. 3, Act 25 of 2019 (w.e.f. 16-08-2019).

2. Subs. by s. 3, *ibid.,* for "seven years" (w.e.f. 16-08- 2019).

3. Ins. by s. 3, *ibid*.,(w.e.f. 16-08-2019).

(ஈ) அவர் சிறாரின் ஆண்குறி, யோனிக்குழாய், ஆசனவாய், மூத்திரக்குழாயில் தம்முடைய வாயைப் பயன்படுத்துவாரானால் அல்லது அத்தகைய நபரிடம் அல்லது பிற நபர் எவரிடமும் அந்தச் சிறாரை அவ்வாறு செய்யும்படிச் செய்வாரானால்

அவர் ''உட்செலுத்துதல் பாலியல் வன்முறையை'' செய்தவராகக் கருதப்படுவார்.

உட்செலுத்துதல் பாலியல் வன்முறை குற்றத்திற்கான தண்டனை.

4. [1][(1)] உட்செலுத்துதல் பாலியல் வன்முறை செய்கிற எவராயினும், [2][பத்து ஆண்டுகளுக்குக்] குறையாத ஆனால் அது ஆயுட்காலம் வரை நீட்டிக்கக்கூடிய ஒரு கால அளவுக்கு சிறைதண்டனை வகைகள் இரண்டில் ஏதாவது ஒன்று விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அபராதத்திற்கு உள்ளாதலும் வேண்டும்.

[3][(2) பதினாறு வயதுக்குக் கீழுள்ள ஒரு சிறாரை உட்செலுத்துதல் பாலியல் வன்முறை செய்கிற எவராகிலும் இருபது ஆண்டுகளுக்குக் குறையாத ஒரு காலவரைக்கு, ஆனால் அந்த நபருடைய இயல்பான ஆயுளின் எஞ்சிய காலத்திற்கான என்று பொருள்படுகிற ஆயுட்கால சிறைத் தண்டனைவரை நீடிக்கக்கூடிய சிறைத்தண்டனை விதித்துதண்டிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் அபராதத்திற்கும் உள்ளாதல் வேண்டும்.

(3). (1) ஆம் உட்பிரிவின்படி விதிக்கப்படும் அபராதம் நேரியதும் தகுமானதுமாக இருத்தலும் மற்றும் பாதிக்கப்பட்டவரின் மருத்துவச் செலவுகளை ஏற்பதற்கும், அத்தகைய பாதிக்கப்பட்டவரின் மறுவாழ்வுக்கும் வழங்கப்படுதலும் வேண்டும்.]

## (ஆ). – கடுமையான உட்செலுத்துதல் பாலியல் வன்முறை மற்றும் அதற்கான தண்டனை

கடுமையான உட்செலுத்துதல் பாலியல் வன்முறை.

5. (அ). (i) காவல்நிலையத்தின் எல்லைகளுக்குள் அல்லது அவர் அமர்த்தப்பட்டிருக்கிற வளாகங்களுக்குள் அல்லது

(ii) காவல்துறை நிலைய வளாகம் எதற்குள்ளும் அது காவல் நிலையத்திற்குள் அமைந்திருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் அதற்காக அவர், அமர்த்தப்பட்டிருக்கிற; அல்லது

(iii) அவருடைய கடமைகளை ஆற்றுகையில் அல்லது பிறவாறாக; அல்லது

---

1. சட்ட எண் 25/2019 இன் 3 ஆம் பிரிவினால் 4 ஆம் பிரிவு அதனின் 4 (1) ஆம் பிரிவாக (16–08–2019 முதல் செல்திறம் பெறுமாறு) மறு எண்ணிடப்பட்டது.
2. மேற்படிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் "ஏழு ஆண்டுகள்" என்பதற்கு, மாற்றாக (16–08–2019 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.
3. மேற்படிச் சட்டத்தின் இன் 3 ஆம் பிரிவினால் (16–08–2019 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

(iv) where he is known as, or identified as, a police officer; or

(b) whoever being a member of the armed forces or security forces commits penetrative sexual assault on a child—

(i) within the limits of the area to which the person is deployed; or

(ii) in any areas under the command of the forces or armed forces; or

(iii) in the course of his duties or otherwise; or

(iv) where the said person is known or identified as a member of the security or armed forces; or

(c) whoever being a public servant commits penetrative sexual assault on a child; or

(d) whoever being on the management or on the staff of a jail, remand home, protection home, observation home, or other place of custody or care and protection established by or under any law for the time being in force, commits penetrative sexual assault on a child, being inmate of such jail, remand home, protection home, observation home, or other place of custody or care and protection; or

(e) whoever being on the management or staff of a hospital, whether Government or private, commits penetrative sexual assault on a child in that hospital; or

(iv) அவர் ஒரு காவல் அலுவலர் என்று அறியப்படும் போது அல்லது அடையாளம் காணப்படும்போது; அல்லது

ஒரு சிறாரிடம் உட்செலுத்துதல் பாலியல் வன்முறை செய்கிற காவல்துறை அலுவலராக இருக்கின்ற எவராயினும், அல்லது

(ஆ). (i) அந்த நபர் ஈடுபடுத்தப்பட்டிருந்த பரப்பிடத்தின் எல்லைகளுக்குள் ; அல்லது

(ii) படைகளின் அல்லது ஆயுதப்படைகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பரப்பிடங்கள் எதிலும்; அல்லது

(iii) அவருடைய கடமைகளை ஆற்றுகையில் அல்லது பிறவாறாக ; அல்லது

(iv) மேற்சொன்ன நபர் பாதுகாப்பு அல்லது ஆயுதப்படைகளின் உறுப்பினர் ஒருவர் என்று அறியப்படுகின்றவிடத்து அல்லது அடையாளம் காணப்படுகின்றவிடத்து ; அல்லது

ஒரு சிறாரிடம் உட்செலுத்துதல் பாலியல் வன்முறையைச் செய்கிற ஆயுதப்படைகளின் அல்லது பாதுகாப்பு படைகளின் உறுப்பினராக இருப்பவர் எவராயினும், அல்லது

(இ) ஒரு சிறாரிடம் உட்செலுத்துதல் பாலியல் வன்முறை செய்கிற அரசுப் பணியாளராக இருப்பவர் எவராயினும்; அல்லது

(ஈ) சிறைச்சாலை, காவல்வைப்பு இல்லம், பாதுகாப்பு இல்லம், கூர்நோக்கு இல்லம், அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டத்தாலோ அல்லது அதன் வழியாலோ நிறுவப்பட்ட பிற பாதுகாப்பு இடத்தினை அல்லது உரிய பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு இடத்தினை மேலாண்மை செய்கிறவாராக அல்லது பணியாளராக இருப்பவரும், அத்தகைய சிறைச்சாலையின், காவல்வைப்பு இல்லத்தின், பாதுகாப்பு இல்லத்தின், கூர்நோக்கு இல்லத்தின் அல்லது பிற பாதுகாப்பு இடத்தில் அல்லது உரிய பராமரிப்பு மற்றும் பிற பாதுகாப்பு இடத்தில் உள்ளே தங்கி இருக்கும் சிறாரிடம் உட்செலுத்துதல் பாலியல் வன்முறை செய்கிறவருமான எவராயினும்; அல்லது

(உ) அரசு மருத்துவமனையாக இருந்தாலும், அல்லது தனியார் மருத்துவமனையாக இருந்தாலும், அந்த மருத்துவமனையை மேலாண்மை செய்கிறவராக அல்லது அதன் பணியாளராக இருப்பவரும், அந்த மருத்துவமனையிலுள்ள சிறாரிடம் உட்செலுத்துதல் பாலியல் வன்முறையைச் செய்கிறவருமான எவராயினும்; அல்லது

(f) whoever being on the management or staff of an educational institution or religious institution, commits penetrative sexual assault on a child in that institution; or

(g) whoever commits gang penetrative sexual assault on a child.

*Explanation.*When a child is subjected to sexual assault by one or more persons of a group in furtherance of their common intention, each of such persons shall be deemed to have committed have committed gang penetrative sexual assault within the meaning of this clause and each of such person shall be liable for that act in the same manner as if it were done by him alone; or

(h) whoever commits penetrative sexual assault on a child using deadly weapons, fire, heated substance or corrosive substance; or

(i) whoever commits penetrative sexual assault causing grievous hurt or causing bodily harm and injury or injury to the sexual organs of the child; or

(j) whoever commits penetrative sexual assault on a child, which—

(i) physically incapacitates the child or causes the child to become mentally ill as defined under clause (*l*) of section 2 of the Mental Health Act, 1987 or causes impairment of any kind so as to render the child unable to perform regular tasks, temporarily or permanently; [1]*** 14/1987.

(ii) in the case of female child, makes the child pregnant as a consequence of sexual assault;

1. The word "or" omitted by Act 25 of 2019, s. 4 (w.e.f. 16-08-2019).

(ஊ) கல்வி நிறுவனத்தை அல்லது சமய நிறுவனத்தை மேலாண்மை செய்கிறவராக அல்லதுஅதன் பணியாளராக இருப்பவரும், அந்தநிறுவனத்திலுள்ள சிறாரிடம் உட்செலுத்துதல் பாலியல் வன்முறையைச் செய்கிறவருமான எவராயினும்; அல்லது

(எ) ஒரு சிறாரிடம் உட்செலுத்துதல் பாலியல் வன்முறையைக் கும்பலாகச் செய்கிற எவராயினும்.

**விளக்கம்:–** ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் தொகுதியினால் அவர்களுடைய பொதுவான உட்கருத்தினை நிறைவேற்றும் வகையில் ஒரு சிறாரை பாலியல் வன்முறைக்கு உட்படுத்துகின்றவிடத்து, அத்தகைய நபர்கள் ஒவ்வொருவரும், இந்தக்கூறின் பொருளின்படி, கும்பலாக உட்செலுத்துதல் பாலியல் வன்முறை செய்தவர்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய நபர் ஒவ்வொருவரும், அந்தச் செயலானது அவரால் மட்டும் செய்யப்பட்டிருந்தாற் போன்றே, அதே முறையில் அந்தச் செயலுக்கான தண்டனைக்கு உள்ளாதல் வேண்டும்; அல்லது

(ஏ) உயிருக்கு ஆபத்தை உண்டாக்கக்கூடிய ஆயுதங்கள், நெருப்பு, சூடேற்றப்பட்ட பொருள் அல்லது அரித்தழிக்கக்கூடிய பொருளைப் பயன்படுத்தி சிறாரிடம் உட்செலுத்துதல் பாலியல் வன்முறையைச் செய்கிற எவராயினும்; அல்லது

(ஐ) கொடுங்காயத்தை ஏற்படுத்தி அல்லது உடலுக்கு தீங்குவிளைவிப்பதன் மூலம் காயத்தை ஏற்படுத்தி அல்லது சிறாரின் பாலியல் உறுப்புகளில் காயத்தை ஏற்படுத்தி உட்செலுத்துதல் பாலியல் வன்முறையைச் செய்கிற எவராயினும்; அல்லது

(ஒ) சிறாரிடம் உட்செலுத்துதல் பாலியல் வன்முறையைச் செய்கிற எவராயினும்; அது –

14/1987.

(i) மனநலச் சட்டம், 1987 இன் 2 ஆ ம் பிரிவின் (ஆ) கூறின் படி பொருள்வரையறை செய்யப்பட்டவாறு சிறாரை உடல் ரீதியாக திறனற்றவராக ஆக்குகிற அல்லது அந்தச் சிறாரை மனநோயாளியாக ஆக்குகிற அல்லது தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக தினமும் செய்துமுடிக்கின்ற பணிகளைச் செய்து முடிக்க இயலாதவாறு ஆக்குகிற; [1]***

(ii) பெண் சிறாரைப் பொறுத்தவரை, பாலியல் வன்முறையின் விளைவாக அந்தச் சிறாரை கர்ப்பமடையச் செய்கிற;

---

1. சட்ட எண் 25/2019 இன் 4 ஆம் பிரிவினால் "அல்லது" என்ற சொல் (16–08–2019 முதல் செல்திறம் பெறுமாறு), விட்டுவிடப்பட்டது.

(iii) inflicts the child with Human Immunodeficiency Virus or any other life threatening disease or Infection which may either temporarily or permanently impair the child by rendering him physically incapacitated, or mentally ill to perform regular tasks; [1]***

[2][(*iv*) causes death of the child; or]

(k) whoever, taking advantage of a child's mental or physical disability, commits penetrative sexual assault on the child; or

(l) whoever commits penetrative sexual assault on the child more than once or repeatedly; or

(m) whoever commits penetrative sexual assault on a child below twelve years; or

(n) whoever being a relative of the child through blood or adoption or marriage or guardianship or in foster care or having a domestic relationship with a parent of the child or who is living in the same or shared household with the child, commits penetrative sexual assault on such child; or

(o) whoever being, in the ownership, or management, or staff, of any institution providing services to the child, commits penetrative sexual assault on the child; or

1. The word "or" omitted by Act 25 of 2019, s. 4 (w.e.f. 16-08-2019).

2. Ins. by s. 4, *ibid* (w.e.f. 16-08-2019).

(iii) சிறாரை மனித நோய்எதிர்ப்புசக்திக் குறைபாடுடையதாக ஆக்குகிற கிருமிகள் மூலம் அல்லது உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் பிற நோய் அல்லது தொற்று நோய்க் கிருமி தொற்றுவதற்கு அச்சிறாரை உள்ளாக்கும் பொருட்டு தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பாதிப்பிற்கு உள்ளாக்குவதன் மூலம் தினமும் செய்யக்கூடிய பணிகளைச் செய்வதற்கு இயலாத வகையில் சிறாரை உடற்திறனற்றவராக அல்லது மனநோயாளியாக ஆக்குகிற, எவராயினும்; [1]***

[2][( iv) சிறாருக்கு மரணத்தை ஏற்படுத்தும்; அல்லது]

(ஓ) சிறாரின் மனநலமின்மையை அல்லது உடல் ஊனத்தைப் பயன்படுத்தி சிறாரிடம் உட்செலுத்துதல் பாலியல் வன்முறையைச் செய்கிற எவராயினும்; அல்லது

(ஔ) சிறாரிடம் உட்செலுத்துதல் பாலியல் வன்முறையை ஒருமுறைக்கு மேல் அல்லது திரும்பத் திரும்ப செய்கிற எவராயினும்; அல்லது

(க) பன்னிரெண்டு வயதிற்குக் கீழுள்ள சிறாரிடம் உட்செலுத்துதல் பாலியல் வன்முறையைச் செய்கிற எவராயினும்; அல்லது

(ங) இரத்த உறவு அல்லது தத்தெடுத்தல் அல்லது திருமணம் அல்லது காப்பாண்மை வாயிலாக அல்லது அன்பாக பேணி வளர்க்கிறவரும் அல்லது சிறாரின் பெற்றோருடன் குடும்ப உறவினைக் கொண்டிருக்கிறவரும் அல்லது சிறாருடன் அதே போன்று அல்லது குடும்பத்தில் பங்கெடுத்து வளர்க்கிறவரும், அத்தகைய சிறாரிடம் உட்செலுத்துதல் பாலியல் வன்முறையைச் செய்கிறவருமான எவராயினும்; அல்லது

(ச) சிறாருக்கு சேவைகள் செய்யவும் நிறுவனம் எதனின் உடைமையுரிமை அல்லது மேலாண்மையைக் கொண்டிருப்பவரும் அல்லது அந்த நிறுவனத்தின் பணியாளராக இருக்கிறவரும், சிறாரிடம் உட்செலுத்துதல் பாலியல் வன்முறையைச் செய்கிறவருமான எவராயினும்; அல்லது

---

1. சட்ட எண் 25/2019 இன் 4 ஆம் பிரிவினால் "அல்லது" என்ற சொல் (16–08–2019 முதல் செல்திறம் பெறுமாறு), விட்டுவிடப்பட்டது.

2. மேற்படிச் சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் (16–08–2019 முதல் செல்திறம் பெறுமாறு), புகுத்தப்பட்டது.

(p) whoever being in a position of trust or authority of a child commits penetrative sexual assault on the child in an institution or home of the child or anywhere else; or

(q) whoever commits penetrative sexual assault on a child knowing the child is pregnant; or

(r) whoever commits penetrative sexual assault on a child and attempts to murder the child; or

(s) whoever commits penetrative sexual assault on a child in the course of [1][communal or sectarian violence or during any natural calamity or in similar situations]; or

(t) whoever commits penetrative sexual assault on a child and who has been previously convicted of having committed any offence under this Act or any sexual offence punishable under any other law for the time being in force; or

(u) whoever commits penetrative sexual assault on a child and makes the child to strip or parade naked in public,

is said to commit aggravated penetrative sexual assault.

Punishment for aggravated penetrative sexual assault.

[2][6. (1) Whoever commits aggravated penetrative sexual assault shall be punished with rigorous imprisonment for a term which shall not be less than twenty years, but which may extend to imprisonment for life, which shall mean imprisonment for the remainder of natural life of that person and shall also be liable to fine, or with death.

(2) The fine imposed under sub-section (1) shall be just and reasonable and paid to the victim to meet the medical expenses and rehabilitation of such victim.]

1. Subs. by Act 25 of 2019, s.4, for "communal or sectarian violence" (w.e.f. 16-08-2019).

2. Subs. by s. 5, *ibid.,* for section 6 (w.e.f.16-08-2019).

(ஞ) நிறுவனம் எதிலும் அல்லது சிறாரின் இல்லத்தில் அல்லது வேறேதாவது இடத்தில் சிறாரிடம் உட்செலுத்துதல் பாலியல் வன்முறை செய்கிறவரும், சிறாரின் நம்பிக்கை அல்லது சிறாரின் அதிகார உரிமை கொண்டிருக்கிறவருமான எவராயினும்; அல்லது

(ட) சிறார் கர்ப்பமாக இருக்கிறார் என்பது தெரிந்திருந்தும் அச்சிறாரிடம் உட்செலுத்துதல் பாலியல் வன்முறையைச் செய்கிற எவராயினும்; அல்லது சிறாரிடம் உட்செலுத்துதல் பாலியல் வன்முறையைச் செய்கிற எவராயினும்; அல்லது

(ண) சிறாரிடம் பாலியல் வன்முறை செய்வதோடு அந்தச் சிறாரை கொலை செய்ய முயற்சிக்கிற எவராயினும்; அல்லது

(த) [1][சாதி அல்லது சமய வன்முறை அல்லது இயற்கைப் பேரிடர் எதனின் போதும் அல்லது அதே போன்ற நிலைமைகளின் போதும்]; அல்லது

(ந) இந்தச் சட்டத்தின்படியான குற்றம் எதனையும் செய்திருந்து அதற்காக முன்னர் தண்டிக்கப்பட்டிருக்கிற எவராயினும் அல்லது அப்போதைக்கு நடைமுறையிலிலுள்ள பிற சட்டம் எதன்படியும் தண்டிக்கப்படத்தக்க பாலியல் குற்றம் எதனையும் செய்கிற மற்றும் சிறாரிடம் உட்செலுத்துதல் பாலியல் வன்முறையைச் செய்கிற எவராயினும்; அல்லது

(ப) சிறாரிடம் உட்செலுத்துதல் பாலியல் வன்முறை செய்கிற மற்றும் பொது இடத்தில் ஆடைகளை நீக்கி நடக்கவிடுகிற அல்லது நிர்வாணமாக்குகிற எவராயினும்,

அவர் ஒரு சிறாரிடம் கடுமையான உட்செலுத்துதல் பாலியல் வன்முறைக் குற்றத்தை செய்தவராகக் கருதப்படுவார்.

கடுமையான உட்செலுத்துதல் பாலியல் வன்முறைக்கான தண்டனை.

[2][**6. (1)** கடுமையான உட்செலுத்துதல் பாலியல் வன்முறை செய்கிற எவராகிலும் இருபது ஆண்டுகளுக்குக் குறையாத ஒரு காலவரைக்கு ஆனால் அந்த நபருடைய இயற்கையான ஆயுளின் எஞ்சிய காலத்திற்கான என்று பொருள்படுகிற ஆயுட்கால சிறைத்தண்டனை வரை நீடிக்கக்கூடிய கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் அபராதத்திற்கும் அல்லது மரண தண்டனைக்கும் உள்ளாதல் வேண்டும்.

**(2). (1)** ஆம் உட்பிரிவின்படி விதிக்கப்படும் அபராதம் நேரியதும் தகுமானதுமாக இருத்தலும் மற்றும் பாதிக்கப்பட்டவரின் மருத்துவச் செலவுகளை ஏற்பதற்கும் அத்தகைய பாதிக்கப்பட்டவரின் மறுவாழ்வுக்கு வழங்கப்படுதலும் வேண்டும்.]

---

1. சட்ட எண் **25/2019** இன் **4** ஆம் பிரிவினால் ''சாதி அல்லது சமய வன்முறை'' என்பதற்கு மாற்றாக **(16–08–2019** முதல் செல்திறம் பெறுமாறு), அமைக்கப்பட்டது.

2. மேற்படிச் சட்டத்தின் **5** ஆம் பிரிவினால் **6** ஆம் பிரிவிற்கு மாற்றாக **(16–08–2019** முதல் செல்திறம் பெறுமாறு), அமைக்கப்பட்டது.

## C. — SEXUAL ASSAULT AND PUNISHMENT THEREFOR

Sexual assault.

7. Whoever, with sexual intent touches the vagina, penis, anus or breast of the child or makes the child touch the vagina, penis, anus or breast of such person or any other person, or does any other act with sexual intent which involves physical contact without penetration is said to commit sexual assault.

Punishment for sexual assault.

8. Whoever, commits sexual assault, shall be punished with imprisonment of either description for a term which shall not be less than three years but which may extend to five years, and shall also be liable to fine.

## D. — AGGRAVATED SEXUAL ASSAULT AND PUNISHMENT THEREFOR

Aggravated sexual assault.

9. (a) Whoever, being a police officer, commits sexual assault on a child—

(i) within the limits of the police station or premises where he is appointed; or

(ii) in the premises of any station house whether or not situated in the police station to which he is appointed; or

(iii) in the course of his duties or otherwise; or

(iv) where he is known as, or identified as a police officer; or

(b) whoever, being a member of the armed forces or security forces, commits sexual assault on a child—

(i) within the limits of the area to which the person is deployed; or

## (இ). – பாலியல் வன்முறை மற்றும் அதற்கான தண்டனை

7. பாலியல் நோக்கத்துடனான செயலைச் செய்யும் எண்ணத்துடன் சிறாரின் யோனிக்குழாய், ஆண்குறி, ஆசனவாய் அல்லது மார்பகத்தைத் தொடுகிற நபர் அத்தகைய அல்லது பிறநபர் எவரும் யோனிக்குழாய் அத்தகைய நபரின் ஆண்குறி, ஆசனவாய் அல்லது மார்பகத்தை அந்தச் சிறாரை விட்டுத் தொடச் செய்கிற அல்லது உட்செலுத்துதல் இல்லாமல் உடல்ரீதியாக பாலியல் எண்ணத்துடனான பிற செயல் எதனையும் செய்கின்ற எவராயினும், பாலியல் வன்முறையைச் செய்தவராகக் கருதப்படுவார். பாலியல் வன்முறை.

8. பாலியல் வன்முறை செய்கிற எவராயினும், மூன்றாண்டுகளுக்குக் குறையாத ஆனால் ஐந்தாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலஅளவுக்குச் சிறைத்தண்டனை வகைகள் இரண்டில் ஏதாவது ஒன்று விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அபராதத்திற்கு உள்ளாதலும் வேண்டும். பாலியல் வன்முறைக்கான தண்டனை.

## (ஈ). – கடுமையான பாலியல் வன்முறை மற்றும் அதற்கான தண்டனை

9. (அ) காவல்துறை அலுவலராக இருக்கும் ஒருவர்– கடுமையான பாலியல் வன்முறை.

(i) அவர் அமர்த்தப்பட்டிருக்கிற காவல் நிலையத்தின் அல்லது வளாகங்களின் எல்லைகளுக்குள் ; அல்லது

(ii) காவல் நிலையத்திற்குள் அமைந்திருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் அவர் அமர்த்தப்பட்டிருக்கிற காவல் இல்லம் எதனின் வளாகங்களுக்குள்; அல்லது

(iii) அவருடைய கடமைகளை ஆற்றுகையில் அல்லது பிறவாறாக ; அல்லது

(iv) அவர் ஒரு காவல்துறை அலுவலர் என்று அறியப்படும்போது அல்லது அடையாளம் காணப்படும்போது ;

அவர் ஒரு சிறாரிடம் பாலியல் வன்முறையைச் செய்வாராயின்; அல்லது

(ஆ) ஆயுதப்படைகளின் அல்லது பாதுகாப்புப்படைகளின் உறுப்பினராக இருக்கக் கூடியவர் –

(i) எந்தப் பரப்பிடத்தின் வட்டார எல்லைகளுக்குள் அந்த நபர் அணிவகுத்து நிறுத்தப்பட்டாரோ அந்தப் பரப்பிடத்தின் வட்டார எல்லைகளுக்குள் ; அல்லது

(ii) in any areas under the command of the security or armed forces; or

(iii) in the course of his duties or otherwise; or

(iv) where he is known or identified as a member of the security or armed forces; or

(c) whoever being a public servant commits sexual assault on a child; or

(d) whoever being on the management or on the staff of a jail, or remand home or protection home or observation home, or other place of custody or care and protection established by or under any law for the time being in force commits sexual assault on a child being inmate of such jail or remand home or protection home or observation home or other place of custody or care and protection; or

(e) whoever being on the management or staff of a hospital, whether Government or private, commits sexual assault on a child in that hospital; or

(f) whoever being on the management or staff of an educational institution or religious institution, commits sexual assault on a child in that institution; or

(g) whoever commits gang sexual assault on a child.

*Explanation.*- when a child is subjected to sexual assault by one or more persons of a group in furtherance of their common intention, each of such persons shall be deemed to have committed gang sexual assault within the meaning of this clause and each of such person shall be liable for that act in the same manner as if it were done by him alone; or

(ii) பாதுகாப்பு அல்லது ஆயுதப்படைகளின் ஆணையின்படி பணியிலிருக்கும் பரப்பிடங்கள் எதிலும் ; அல்லது

(iii) அவருடைய கடமைகளை ஆற்றுகையில் அல்லது பிறவாறாக; அல்லது

(iv) அவர் பாதுகாப்பு அல்லது ஆயுதப்படைகளின் உறுப்பினர் ஒருவர் என்று அறியப்படும்போது அல்லது அடையாளம் காணப்படுகின்றவிடத்து ;

சிறாரிடம் பாலியல் வன்முறையைச் செய்கிற எவராயினும் ; அல்லது

**(இ)** அரசு பணியாளராக இருப்பவரும் சிறாரிடம் பாலியல் வன்முறையைச் செய்கிறவருமான எவராயினும்; அல்லது

**(ஈ)** சிறைச்சாலை, அல்லது காவல் வைப்பு இல்லம் அல்லது பாதுகாப்பு இல்லம் அல்லது கூர்நோக்கு இல்லம் அல்லது பிற காவல் இடம் அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள ஏதேனும் சட்டத்தாலோ அல்லது அதன் வழியாலோ நிறுவப்பட்ட பாதுகாப்பு பொறுப்பு இடத்தின் மேலாளராக அல்லது பணியாளராக இருப்பவரும், அத்தகைய சிறைச்சாலை அல்லது காவல் வைப்பு இல்லம் அல்லது பாதுகாப்பு இல்லம் அல்லது கூர்நோக்கு இல்லம் அல்லது பிற பாதுகாப்பு பொறுப்பு இடம் அல்லது உரிய பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு இடத்தில் உள்ளே தங்கி இருக்கும் சிறாரிடம் பாலியல் வன்முறை செய்கிறவருமான எவராயினும்; அல்லது

**(உ)** மருத்துவமனையொன்றின், அது அரசு மருத்துவமனையாக அல்லது தனியார் மருத்துவமனையாக இருந்தாலும் அதன் மேலாளராக அல்லது பணியாளராக இருப்பவரும், அந்த மருத்துவமனையிலுள்ள சிறாரிடம் பாலியல் வன்முறையைச் செய்கிறவருமான எவராயினும்; அல்லது

**(ஊ)** கல்வி நிறுவனத்தின் அல்லது சமய நிறுவனத்தின் மேலாளராக அல்லது பணியாளராக இருப்பவரும் அந்த நிறுவனத்திலுள்ள சிறாரிடம் பாலியல் வன்முறை செய்கிறவருமான எவராயினும்; அல்லது

**(எ)** ஒரு சிறாரிடம் கும்பலாக பாலியல் வன்முறையைச் செய்கிற எவராயினும்.

**விளக்கம்.—** ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் தொகுதியினால் அவர்கள் அனைவரின் உட்கருத்துடன் சிறாரை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தும் போது, அத்தகைய நபர்கள் ஒவ்வொருவரும், இந்தக் கூறின் பொருளின்படி கும்பலாக பாலியல் வன்முறையைச் செய்தவர்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும், மற்றும் அத்தகைய நபர் ஒவ்வொருவரும், அவரால் மட்டுமே அது செய்யப்பட்டிருந்தாற் போன்று அதே முறையில் அந்தச் செயலுக்காக தண்டனைக்கு உள்ளாதல் வேண்டும்; அல்லது

(h) whoever commits sexual assault on a child using deadly weapons, fire, heated substance or corrosive substance; or

(i) whoever commits sexual assault causing grievous hurt or causing bodily harm and injury or injury to the sexual organs of the child; or

(j) whoever commits sexual assault on a child, which—

(i) physically incapacitates the child or causes the child to become mentally ill as defined under clause (*l*) of section 2 of the Mental Health Act, 1987 or causes impairment of any kind so as to render the child unable to perform regular tasks, temporarily or permanently; or 14/1987.

(ii) inflicts the child with Human Immunodeficiency Virus or any other life threatening disease or infection which may either temporarily or permanently impair the child by rendering him physically incapacitated, or mentally ill to perform regular tasks; or

(k) whoever, taking advantage of a child's mental or physical disability, commits sexual assault on the child; or

(l) whoever commits sexual assault on the child more than once or repeatedly; or

(m) whoever commits sexual assault on a child below twelve years; or

(n) whoever, being a relative of the child through blood or adoption or marriage or guardianship or in foster care, or having domestic relationship with a parent of the child, or who is living in the same or shared household with the child, commits sexual assault on such child; or

(ஏ) உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய ஆயுதங்களை, நெருப்பை, சூடேற்றப்பட்ட பொருளை அல்லது அரிப்பை ஏற்படுத்தக்கூடிய பொருளைப் பயன்படுத்தி சிறாரிடம் பாலியல் வன்முறை செய்கிற எவராயினும்; அல்லது

(ஐ) சிறாரிடம் பாலியல் வன்முறையைச் செய்வதன் மூலம் கொடுங்காயத்தை அல்லது உடலளவில் தீங்கினை விளைவிக்கிற மற்றும் காயத்தை அல்லது சிறாரின் பாலியல் உறுப்புகளுக்கு காயத்தை ஏற்படுத்துகிற எவராயினும்; அல்லது

14/1987.

(ஒ) (i) மனநலச் சட்டம், 1987 இன் 2 ஆம் பிரிவின் (ஔ) கூறின்படி பொருள்வரையறை செய்யப்பட்டவாறு சிறாரை உடற்தகுதியற்றவராக அல்லது அந்தச் சிறாரை மனநோயுற்றவராக ஆக்குகிற அல்லது தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக தினமும் செய்யக்கூடிய முறையான கடமைகளைப் புரிய இயலாதபடிக்கு அந்தச் சிறாரை ஆக்கும் பொருட்டு எந்தவகையிலுமான ஊறினை விளைவிக்கிறவரும்; அல்லது

(ii) சிறாரை மனித நோய்எதிர்ப்புசக்தி குறைபாடுடையவராக ஆக்குகிற கிருமிகள் மூலம் அல்லது உயிருக்கு கேடு விளைவிக்கும் பிற நோய் அல்லது தொற்று நோய்க் கிருமி தொற்றுவதற்கு அச்சிறாரை உள்ளாக்கும் பொருட்டு தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக தினமும் செய்யக்கூடிய பாதிப்பிற்குள்ளாக்குவதன் மூலம் தினமும் செய்யக்கூடிய முறையான கடமைகளைப் புரிவதற்கு இயலாதபடிக்கு அந்தச் சிறாரை உடற்திறனற்றவராக அல்லது மனநோயுற்றவராக ஆக்குகிறவரும் சிறாரிடம் பாலியல் வன்முறை செய்கிறவருமான எவராயினும்; அல்லது

(ஓ) சிறாரின் மனநலமின்மையை அல்லது உடல் ஊனத்தை அடிப்படையாகக் கொண்டு அதன் மூலம் பயனடையும் வகையில் சிறாரிடம் பாலியல் வன்முறையைச் செய்கிற எவராயினும் ; அல்லது

(ஔ) ஒன்றுக்கு மேற்பட்ட முறையில் அல்லது திரும்பத் திரும்ப சிறாரிடம் பாலியல் வன்முறையைச் செய்கிற எவராயினும் ; அல்லது

(க) பன்னிரண்டு வயதிற்குக் கீழேயுள்ள சிறாரிடம் பாலியல் வன்முறை செய்கிற எவராயினும்; அல்லது

(ங) இரத்த உறவு அல்லது தத்தெடுத்தல் அல்லது திருமணம் அல்லது காப்பாண்மை வாயிலாக அல்லது அன்பாக பேணி வளர்க்கிறவரும் அல்லது சிறாரின் பெற்றோருடன் குடும்ப உறவினைக் கொண்டிருக்கிறவரும் அல்லது சிறாருடன் அதே குடும்பத்தில் அல்லது பகிர்ந்து வாழும் குடும்ப அமைப்பில் இருக்கிறவரும் அத்தகைய சிறாரிடம் உட்செலுத்துதல் பாலியல் வன்முறை செய்கிறவருமான எவராயினும்; அல்லது

(o) whoever, being in the ownership or management or staff, of any institution providing services to the child, commits sexual assault on the child in such institution; or

(p) whoever, being in a position of trust or authority of a child, commits sexual assault on the child in an institution or home of the child or anywhere else; or

(q) whoever commits sexual assault on a child knowing the child is pregnant; or

(r) whoever commits sexual assault on a child and attempts to murder the child; or

(s) whoever commits sexual assault on a child in the course of [1][communal or sectarian violence or during any natural calamity or in any similar situations]; or

(t) whoever commits sexual assault on a child and who has been previously convicted of having committed any offence under this Act or any sexual offence punishable under any other law for the time being in force; or

(u) whoever commits sexual assault on a child and makes the child to strip or parade naked in public;

[1][(v) whoever persuades, induces, entices or coerces a child to get administered or administers or direct anyone to administer, help in getting administered any drug or hormone or any chemical substance, to a child with the intent that such child attains early sexual maturity,]

is said to commit aggravated sexual assault.

1. Subs. by Act 25 of 2019, s.6, for "communal or sectarian violence" (w.e.f. 16-08-2019).

2. Ins. by s. 6, *ibid.*, (w.e.f. 16-08-2019).

(ச) சிறாருக்கு சேவைகள் செய்யும் நிறுவனம் எதனின் உடைமையுரிமை அல்லது மேலாண்மையையும் கொண்டிருந்து அல்லது அந்த நிறுவனத்தின் பணியாளராகவும் இருந்து அத்தகைய நிறுவனத்திலுள்ள சிறாரிடம் பாலியல் வன்முறையைச் செய்கிற எவராயினும்; அல்லது

(ஞ) ஒரு சிறாரின் நம்பிக்கைக்கு அல்லது சிறாரிடம் அதிகாரவுரிமை கொண்டிருப்பவரும் நிறுவனமொன்றில் அல்லது சிறாரின் இல்லத்தில் அல்லது வேறொரிடத்தில் சிறாரிடம் பாலியல் வன்முறையைச் செய்கிறவருமான எவராயினும்; அல்லது

(ட) சிறார் கர்ப்பமாக இருக்கிறார் என்று தெரிந்திருந்தும் அச்சிறாரிடம் பாலியல் வன்முறையைச் செய்கிற எவராயினும்; அல்லது

(ண) சிறாரிடம் பாலியல் வன்முறையைச் செய்வதோடு அந்தச் சிறாரைக் கொலை செய்ய முயற்சிக்கிற எவராயினும்; அல்லது

(த) [1][சாதி அல்லது சமய வன்முறை அல்லது இயற்கைப் பேரிடர் எதனின் போதும் அல்லது அதே போன்ற நிலைமைகளின்] போதும் சிறாரிடம் பாலியல் வன்முறையைச் செய்கிற எவராயினும்; அல்லது

(ந) இந்தச் சட்டத்தின்படியான குற்றம் எதனையும் செய்திருந்து அதற்காக முன்னர் தண்டிக்கப்பட்டிருக்கிற எவராயினும் அல்லது அப்போதைக்கு நடைமுறையிலிலுள்ள பிற சட்டம் எதன்படியும் தண்டிக்கப்படத்தக்க பாலியல் குற்றம் எதனையும் செய்கிற மற்றும் சிறாரிடம் பாலியல் வன்முறையைச் செய்கிற எவராயினும்; அல்லது

(ப) சிறாரிடம் பாலியல் வன்முறை செய்கிற மற்றும் பொது இடத்தில் ஆடைகளை நீக்கி நடக்கவிடுகிற அல்லது நிர்வாணமாக்குகிற எவராயினும்;

[2][(ம) சிறார் ஒருவருக்கு அத்தகைய சிறார் முன்னதாகவே பாலியல் முதிர்ச்சி எய்தும் உள்நோக்கத்துடன் மருந்துப்பொருள் அல்லது இயக்குநீர் எதனையும் அல்லது வேதியல் பொருள் எதனையும் செலுத்திக்கொள்ளுமாறு இணங்க வைக்கிற, தூண்டுகிற, ஆவலூட்டுகிற அல்லது கட்டாயப்படுத்துகிற அல்லது செலுத்துகிற அல்லது செலுத்துமாறு எவரையும் பணிக்கிற, செலுத்திக்கொள்வதில் உதவுகிற எவராயினும்,]

சிறாரிடம் கடுமையான பாலியல் வன்முறையைச் செய்தவராகக் கருதப்படுவார்.

---

1. சட்ட எண் 25/2019 இன் 6 ஆம் பிரிவினால் ''சாதி அல்லது சமய வன்முறை'' என்பதற்கு, மாற்றாக (16–08–2019 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

2. மேற்படிச் சட்டத்தின் 6 ஆம் பிரிவினால் (16–08–2019 முதல் செல்திறம் பெறுமாறு), புகுத்தப்பட்டது.

Punishment for aggravated sexual assault.

10. Whoever, commits aggravated sexual assault shall be punished with imprisonment of either description for a term which shall not be less than five years but which may extend to seven years, and shall also be liable to fine.

## E. — SEXUAL HARASSMENT AND PUNISHMENT THEREFOR

Sexual harassment.

11. A person is said to commit sexual harassment upon a child when such person with sexual intent,—

(i) utters any word or makes any sound, or makes any gesture or exhibits any object or part of body with the intention that such word or sound shall be heard, or such gesture or object or part of body shall be seen by the child; or

(ii) makes a child exhibit his body or any part of his body so as it is seen by such person or any other person; or

(iii) shows any object to a child in any form or media for pornographic purposes; or

(iv) repeatedly or constantly follows or watches or contacts a child either directly or through electronic, digital or any other means; or

(v) threatens to use, in any form of media, a real or fabricated depiction through electronic, film or digital or any other mode, of any part of the body of the child or the involvement of the child in a sexual act; or

(vi) entices a child for pornographic purposes or gives gratification therefor.

**10.** கடுமையான பாலியல் வன்முறை செய்கிற எவராயினும், ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாத, ஆனால் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய காலவரை ஒன்றுக்கான சிறைதண்டனை வகை இரண்டில் ஏதாவது ஒன்று விதிக்கப்பட்டு தண்டிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அபராதத்திற்கும் உள்ளாதல் வேண்டும். கடுமையான பாலியல் வன்முறைக்கான தண்டனை.

**(உ). – பாலியல் தொல்லை மற்றும் அதற்கான தண்டனை**

**11.** நபர் ஒருவர் பாலியல் எண்ணத்துடன்,– பாலியல் தொல்லை.

(i) சிறாரினால் சொல் அல்லது ஒலி கேட்கப்படும் அல்லது சைகை அல்லது பொருள் அல்லது உடலின் பகுதி பார்க்கப்படும் என்ற நோக்கத்துடன் அத்தகைய சொல் எதனையும் கூறும் போது அல்லது ஒலி எதனையும் எழுப்புகிற போது அல்லது சைகை எதனையும் காட்டுகிறபோது பொருள் எதனையும் அல்லது உடலின் பகுதி எதனையும் காட்டுகிற போது; அல்லது

(ii) அத்தகைய நபர் அல்லது பிறநபர் எவராலும் பார்க்கப்படும் பொருட்டு அந்தச் சிறார் தன்னுடைய உடலை அல்லது தன்னுடைய உடலின் பகுதி எதனையும் காட்டுமாறு செய்கிறபோது; அல்லது

(iii) இழிபொருள் ஓவியமாக காட்சிப்படுத்தும் நோக்கங்களுக்காக சிறாரிடம் ஏதாவது ஒரு பொருளை ஏதாவது ஒரு வடிவத்திலோ அல்லது ஊடகத்திலோ காட்டுவது; அல்லது

(iv) நேரடியாகவோ அல்லது மின்னணுவியல், கணினி அல்லது பிற வழி எதன் மூலமாகவோ ஒரு சிறாரை அல்லது திரும்பத்திரும்ப அல்லது இடைவிடாது பின்தொடர்கிறபோது அல்லது கண்காணித்து வருகிறபோது அல்லது தொடர்பு கொள்கிற போது; அல்லது

(v) சிறாரின் உடலின் பகுதி எதனையும் அல்லது பாலியல் செயலில் சிறாரை ஈடுபடுத்தியதை, மின்னணுவியல், படச்சுருள், அல்லது கணினி மூலமாக அல்லது பிறமுறை எதன் மூலமும் ஊடக வடிவம் எதிலும், உண்மையாக அல்லது பொய்யாகப் புனைந்து வரையப்பட்ட ஓவியத்தைப் பயன்படுத்தயிருப்பதாக பயமுறுத்துகிறபோது,; அல்லது

(vi) இழிபொருள் ஓவியமாகக் காட்டும் நோக்கங்களுக்காக அல்லது அதற்காகப் பணம் கொடுப்பதாக சிறாருக்கு ஆசைகாட்டி இணங்க வைக்கிறபோது,

சிறாரிடம் பாலியல் தொல்லைக் கொடுத்தவராகக் கருதப்படுவார்.

*Explanation*.- Any question which involves “sexual intent” shall be a question of fact.

Punishment for sexual harassment.

12. Whoever, commits sexual harassment upon a child shall be punished with imprisonment of either description for a term which may extend to three years and shall also be liable to fine.

## CHAPTER III

### USING CHILD FOR PORNOGRAPHIC PURPOSES AND PUNISHMENT THEREFOR

Use of child for pornographic purposes.

13. Whoever, uses a child in any form of media (including programme or advertisement telecast by television channels or internet or any other electronic form or printed form, whether or not such programme or advertisement is intended for personal use or for distribution), for the purposes of sexual gratification, which includes—

(a) representation of the sexual organs of a child;

(b) usage of a child engaged in real or simulated sexual acts (with or without penetration);

(c) the indecent or obscene representation of a child,

shall be guilty of the offence of using a child for pornographic purposes.

Explanation. - For the purposes of this section, the expression ‘‘use a child’’ shall include involving a child through any medium like print, electronic, computer or any other technology for preparation, production, offering, transmitting, publishing, facilitation and distribution of the pornographic material.

**விளக்கம்.—** ''பாலியல் எண்ணத்தை'' உள்ளடக்கியுள்ள பிரச்சினை எதுவும், ஒரு பொருண்மைப் பிரச்சினையாக இருக்கும்.

**12.** சிறாரிடம் பாலியல் தொல்லை கொடுக்கிற எவராயினும் மூன்றாண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு கால அளவுக்கு சிறைதண்டனை வகை இரண்டில் ஏதாவது ஒன்று விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அபராதத்திற்கும் உள்ளாதல் வேண்டும்.

பாலியல் தொல்லைக்கான தண்டனை.

## அத்தியாயம் III

### இழிபொருள் ஓவியமாக காட்சிப்படுத்தும் நோக்கங்களுக்காக சிறார்களைப் பயன்படுத்துதல் மற்றும் அதற்கான தண்டனை

**13.** (அ) சிறாரின் பாலியல் உறுப்பினைக் காண்பித்தல்;

இழிபொருள் ஓவியமாக காட்சிப்படுத்தும் நோக்கங்களுக்காக சிறார்களைப் பயன்படுத்துதல்.

(ஆ) சிறார் ஒருவரை; (உட்செலுத்துதலுடன் அல்லது இல்லாமல்) உண்மையாக அல்லது போலியாக உருவாக்கப்பட்ட பாலியல் செயல்களில் ஈடுபடுத்த பயன்படுத்துதல்;

(இ) சிறாரை அநாகரிகமாக அல்லது ஆபாசமாக சுட்டிக்காட்டுதல்,

ஆகியவை உள்ளடங்கலாக பாலியல் அடிப்படையிலான செயல்களினால் மனநிறைவுபெறும் நோக்கங்களுக்காக (அத்தகைய நிகழ்ச்சி அல்லது விளம்பரம் சொந்த பயன்பாட்டிற்கான நோக்கத்துடன் அல்லது விநியோகத்திற்காக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும், நிகழ்ச்சி அல்லது விளம்பரம் தொலைக்காட்சி அலைவரிசைகள் அல்லது இணையதளம் அல்லது பிற மின்னணுவியல் வடிவம் எதிலும் அல்லது அச்சிடப்பட்ட வடிவத்தில் ஒளிபரப்பப்படுதல் உள்ளடங்கலாக) ஊடக வடிவம் எதிலும் சிறாரைப் பயன்படுத்துகிற எவராயினும், இழிபொருள் ஓவியமாகக் காட்டுவதற்காக சிறாரைப் பயன்படுத்தியுள்ள குற்றத்தைச் செய்தவராவார்.

**விளக்கம். —** இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, ''சிறார் ஒருவரைப் பயன்படுத்துதல்'' என்கின்ற சொற்றொடர், ஒரு சிறாரை இழிபொருள் ஓவியமாக காட்டும் பொருளை அச்சிடுதல், மின்னணுவியல், கணினி போன்ற ஊடகம் எதனின் வாயிலாகவும் அல்லது தயாரிப்பதற்கான, உருவாக்குவதற்கான, முனைதலுக்கான, அனுப்புவதற்கான, வெளியிடுவதற்கான எளிதாகக் கிடைக்குமாறு செய்வதற்கான பிற தொழில்நுட்பம் எதனையும் மற்றும் விநியோகம் செய்வதையும் உள்ளடக்கும்.

[1][Punishment for using child for pornographic purposes.

[14. (1) Whoever uses a child or children for pornographic purposes shall be punished with imprisonment for a term which shall not be less than five years and shall also be liable to fine and in the event of second or subsequent conviction with imprisonment for a term which shall not be less than seven years and also be liable to fine.

(2) Whoever using a child or children for pornographic purposes under sub-section (1), commits an offence referred to in section 3 or section 5 or section 7 or section 9 by directly participating in such pornographic acts, shall be punished for the said offences also under section 4, section 6, section 8 and section 10, respectively, in addition to the punishment provided in sub-section (1).]

[2][Punishment for storage of pornographic material involving child.

15. (1) Any person, who stores or possesses pornographic material in any form involving a child, but fails to delete or destroy or report the same to the designated authority, as may be prescribed, with an intention to share or transmit child pornography, shall be liable to fine not less than five thousand rupees and in the event of second or subsequent offence, with fine which shall not be less than ten thousand rupees.

(2) Any person, who stores or possesses pornographic material in any form involving a child for transmitting or propagating or displaying or distributing in any manner at any time except for the purpose of reporting, as may be prescribed, or for use as evidence in court, shall be punished with imprisonment of either description which may extend to three years, or with fine, or with both.

1. Subs. by Act 25 of 2019, s. 7, for section 14 (w.e.f. 16-08-2019).

2. Subs. by s. 8, ibid., for section15 (w.e.f. 16-08-2019).

[1][14. (1) ஒரு சிறாரை அல்லது சிறார்களை இழிபொருள் ஓவியமாகக் காட்சிப்படுத்துகிற நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகிற எவராயினும் ஐந்தாண்டுகளுக்குக் குறையாத ஒரு காலஅளவிற்குச் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் அபராதத்திற்கும் உள்ளாதல் வேண்டும்; மற்றும் இரண்டாம் அல்லது அதற்குப் பிந்தய குற்றத்தீர்ப்பின் நேர்வில் ஏழாண்டுகளுக்குக் குறையாத ஒரு காலஅளவிற்குச் சிறைத்தண்டனை விதித்தும் தண்டிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் அபராதத்திற்கு உள்ளாதலும் வேண்டும். இழிபொருள் ஓவியமாகக் காட்சிப்படுத்தும் நோக்கங்களுக்காக சிறார்களைப் பயன்படுத்துவதற்கான தண்டனை.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி ஒரு சிறாரை அல்லது சிறார்களை இழிபொருள் ஓவியமாகக் காட்சிப்படுத்தும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தி அத்தகைய இழிபொருள் ஓவியமாகக் காட்சிப்படுத்தும் செயல்களில் நேரடியாக பங்குபெறுவதன் மூலமாக 3 ஆம் பிரிவிலோ அல்லது 5 ஆம் பிரிவிலோ அல்லது 7 ஆம் பிரிவிலோ அல்லது 9 ஆம் பிரிவிலோ சுட்டப்பட்ட குற்றச்செயலொன்றைச் செய்கிற எவராகிலும் (1) ஆம் உட்பிரிவில் வகைசெய்யப்பட்ட தண்டனையோடும்கூட முறையே 4 ஆம் பிரிவு, 6 ஆம் பிரிவு, 8 ஆம் பிரிவு மற்றும் 10 ஆம் பிரிவு ஆகியவற்றின்படியும் மேற்சொன்ன குற்றச்செயல்களுக்காகத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.]

[2][15. (1) ஒரு சிறாரை உட்படுத்தி, எந்த ஒரு வடிவிலுமான இழிபொருள் ஓவியமாகக் காட்சிப்படுத்தும் சாதனத்தைச் சேகரித்து வைத்திருந்து அல்லது கைவசம் வைத்திருந்து ஆனால் சிறாரினை இழிபொருள் ஓவியமாகக் காட்சிப்படுத்துவதை பகிர்ந்து கொள்ளும் அல்லது அனுப்பி வைக்கும் உட்கருத்துடன் அதனை நீக்கவோ, அழிக்கவோ, அல்லது வகுத்துரைக்கப்படலாகிறவாறு பெயர் குறித்தமர்த்தப்பட்ட அதிகார அமைப்புக்குத் தெரிவிக்கவோ தவறுகிற நபர் எவரும் ஐந்தாயிரம் ரூபாய்க்குக் குறையாத அபராதத்திற்கும் இரண்டாம் அல்லது பிந்தைய குற்றச்செயலின் நேர்வில் பத்தாயிரம் ரூபாய்க்குக் குறைவாக இருக்கலாகாத அபராதத்திற்கும் உள்ளாதல் வேண்டும். சிறாரை உட்படுத்தி இழிபொருள் ஓவியமாகக் காட்சிப்படுத்தும் சாதனத்தைச் சேகரித்து வைப்பதற்கான தண்டனை.

(2) ஒரு சிறாரை உட்படுத்தும் எந்த ஒரு வடிவத்திலுமான இழிபொருள் ஓவியமாகக் காட்சிப்படுத்தும் சாதனத்தை வகுத்துரைக்கப்படலாகிறவாறு தெரியப்படுத்தும் நோக்கத்திற்காகவோ அல்லது நீதிமன்றத்தில் சான்றாக பயன்படுத்துவதற்காகவோ தவிர, எந்த ஒரு சமயத்திலும் எந்த ஒரு முறையிலும் அனுப்பி வைப்பதற்காகவோ அல்லது ஓதிப்பரப்புவதற்காகவோ அல்லது காணுமாறு வைப்பதற்காகவோ அல்லது பகிர்ந்தளிப்பதற்காகவோ சேகரித்து வைக்கிற அல்லது கைவசம் வைத்திருக்கிற நபர் எவரும் மூன்றாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய சிறைத்தண்டனை வகைகள் இரண்டில் ஏதாவது ஒன்றை விதித்தோ அல்லது அபராதம் விதித்தோ அல்லது அவை இரண்டும் விதித்தோ தண்டிக்கப்படுதல் வேண்டும்.

1. சட்ட எண் 25/2019 இன் 7 ஆம் பிரிவினால் 14 ஆம் பிரிவிற்கு, மாற்றாக (16–08–2019 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

2. மேற்படிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் 15 ஆம் பிரிவிற்கு, மாற்றாக (16–08–2019 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

(3) Any person, who stores or possesses pornographic material in any form involving a child for commercial purpose shall be punished on the first conviction with imprisonment of either description which shall not be less than three years which may extend to five years, or with fine, or with both and in the event of second or subsequent conviction, with imprisonment of either description which shall not be less than five years which may extend to seven years and shall also be liable to fine.]

## CHAPTER IV

### ABETMENT OF AND ATTEMPT TO COMMIT AN OFFENCE

Abetment of an offence.

16. A person abets an offence, who—

*First*.- Instigates any person to do that offence; or

*Secondly*. Engages with one or more other person or persons in any conspiracy for the doing of that offence, if an act or illegal omission takes place in pursuance of that conspiracy, and in order to the doing of that offence; or

*Thirdly*. - Intentionally aids, by any act or illegal omission, the doing of that offence.

*Explanation I*.- A person who, by wilful misrepresentation, or by wilful concealment of a material fact, which he is bound to disclose, voluntarily causes or procures, or attempts to cause or procure a thing to be done, is said to instigate the doing of that offence.

*Explanation II*.- Whoever, either prior to or at the time of commission of an act, does anything in order to facilitate the commission of that act, and thereby facilitates the commission thereof, is said to aid the doing of that act.

**(3)** வணிகநோக்கத்திற்காக ஒரு சிறாரை உட்படுத்தி எந்த ஒரு வடிவத்திலுமான இழிபொருள் ஓவியமாகக் காட்சிப்படுத்தும் சாதனத்தைச் சேகரித்து வைக்கிற அல்லது கைவசம் வைத்திருக்கிற நபர் எவரும் முதல் குற்றத்தீர்ப்பின் பேரில் மூன்றாண்டுகளுக்குக் குறைவாக இருக்கலாகாத, ஐந்தாண்டுகள் வரை நீட்டிக்கக்கூடிய சிறைத்தண்டனை வகைகள் இரண்டில் ஏதாவது ஒன்றை விதித்தோ அல்லது அபராதம் விதித்தோ அல்லது அவை இரண்டும் விதித்தோ மற்றும் இரண்டாம் அல்லது அதற்கு பிந்தைய குற்றத்தீர்ப்பின் நேர்வில் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக இருக்கலாகாத, ஏழாண்டுகள் வரை நீட்டிக்கக்கூடிய சிறைதண்டனை வகைகள் இரண்டில் ஏதாவது ஒன்றை விதித்தும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.]

## அத்தியாயம் IV

### குற்றம் செய்வதற்கு உடந்தையாயிருத்தலும் மற்றும் முயற்சி செய்தலும்

குற்றத்திற்கு உடந்தையாயிருத்தல்.

**16.** குற்றத்திற்கு உடந்தையாயிருக்கிற எந்த நபர் ஒருவர்,

**முதலாவதாக**.– அந்தக் குற்றத்தைச் செய்வதற்கு நபர் எவரையும் தூண்டுகிறாரோ; அல்லது

**இரண்டாவதாக**.– சதியைத் தொடர்ந்து ஒரு செய்கை அல்லது சட்டத்திற்கு முரணானவிடுகை செய்யப்படுமானால், முன்குறிப்பிட்ட குற்றத்தைச் செய்வதற்காகவும் அந்தக் குற்றம்செய்யப்படும் பொருட்டும் சதி எதிலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிற நபர் அல்லது நபர்களை ஈடுபடுத்தியிருக்கிறாரோ;

**மூன்றாவதாக**. – முன்குறிப்பிட்ட குற்றத்தைச் செய்வதற்காக ஏதேனும் செய்கை அல்லது சட்டத்திற்கு முரணான விடுகை வாயிலாக வேண்டுமென்றே திட்டமிட்டு உதவி செய்கிறாரோ

அந்த நபர் முன்குறிப்பிட்ட குற்றத்திற்கு உடந்தையாயிருக்கிற நபர் ஆவார்.

**விளக்கம் I. –** அவர் வெளிப்படுத்துவதற்கு கடமைப்பட்டிருக்கிற முக்கியமான பொருண்மையை வேண்டுமென்றே திரித்துக் கூறுவதன் மூலம் அல்லது வேண்டுமென்றே மறைத்து வைப்பதன் மூலம், அந்தச் செயலைத் தன்னிச்சையாக செய்கிற அல்லது செய்வதற்கு உதவி புரிகிற அல்லது செய்வதற்கு அல்லது உதவி புரிவதற்கு முயற்சி செய்கிற நபர் ஒருவர் முன்குறிப்பிட்ட குற்றத்தைச் செய்வதற்கு தூண்டியவராகக் கருதப்படுவார்.

**விளக்கம் II. –** செயல் ஒன்றை செய்வதற்கு முன்போ அல்லது செய்யப்படும் நேரத்திலோ அந்தச் செயலை எளிதில் செய்து முடிக்கும் பொருட்டு எதனையும் செய்கிற மற்றும் அதன் விளைவாக அந்தக் குற்றத்தை எளிதில் செய்து முடிக்க உதவி செய்கிற எவராயினும், அவர் முன்குறிப்பிட்ட குற்றத்தைச் செய்வதற்கு உதவி செய்தவராகக் கருதப்படுவார்.

*Explanation III*.- Whoever employ, harbours, receives or transports a child, by means of threat or use of force or other forms of coercion, abduction, fraud, deception, abuse of power or of a position, vulnerability or the giving or receiving of payments or benefits to achieve the consent of a person having control over another person, for the purpose of any offence under this Act, is said to aid the doing of that act.

Punishment for abetment.

17. Whoever abets any offence under this Act, if the act abetted is committed in consequence of the abetment, shall be punished with punishment provided for that offence.

*Explanation.* An act or offence is said to be committed in consequence of abetment, when it is committed in consequence of the instigation, or in pursuance of the conspiracy or with the aid, which constitutes the abetment.

Punishment for attempt to commit an offence.

18. Whoever attempts to commit any offence punishable under this Act or to cause such an offence to be committed, and in such attempt, does any act towards the commission of the offence, shall be punished with imprisonment of any description provided for the offence, for a term which may extend to one half of the imprisonment for life or, as the case may be, one-half of the longest term of imprisonment provided for that offence or with fineor with both.

## CHAPTER V

## PROCEDURE FOR REPORTING OF CASES

Reporting of offences.

19. (1) Notwithstanding anything contained in the Code of Criminal Procedure, 1973 any person (including the child), who has apprehension that an offence under this Act is likely to be committed or has knowledge that such an offence has been committed, he shall provide such information to,— 2/1974.

(a) the Special Juvenile Police Unit; or

(b) the local police.

**விளக்கம் III. –** அச்சுறுத்தல் அல்லது வன்முறையைப் பயன்படுத்துவதன் மூலமாக அல்லது பிற வடிவிலான அச்சுறுத்தல், ஆட்கடத்தல், மோசடி, வஞ்சனை, அதிகாரம் அல்லது பதவியைத் தவறாகப்பயன்படுத்துதல் மூலமாக தாக்குதலுக்கு உள்ளாகக்கூடியவாறு சிறாரை வேலைக்கு அமர்த்துகிற, அதற்குப் புகலிடமளிக்கிற, அதனைப் பெறுகிற அல்லது கொண்டுசெல்கிற, இந்தச் சட்டத்தின் படியான குற்றம் எதன் பொருட்டும் மற்றொரு நபர் மீது ஆளுகை கொண்டிருக்கிற, நபரின் இசைவைப் பெறுவதற்கு வசப்படுத்தி பணம் கொடுக்கிற அல்லது சலுகை வழங்குகிற அல்லது அன்பைப் பெறுகிற எவராயினும் முன்குறிப்பிட்ட செயலைச் செய்வதற்கு உதவி செய்தவராகக் கருதப்படுவார்.

உடந்தையா–யிருந்ததற்கான தண்டனை.

**17.** இந்தச் சட்டத்தின்படியான குற்றம் எதற்கும் உடந்தையாயிருக்கிற எவராயினும், உடந்தையாயிருத்தலின் விளைவாக அக்குற்றம் செய்யப்படுமாயின், அவர் முன்பு குறிப்பிட்ட குற்றத்திற்காக வகைசெய்யப்பட்டுள்ள தண்டனை விதித்து தண்டிக்கப்படுவார்.

**விளக்கம். –** தூண்டுதலின் விளைவாகவோ அல்லது சதியைத் தொடர்ந்தோ அல்லது அதன் உதவியுடனோ உடந்தையாயிருந்ததன் விளைவாக செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் செயல் அல்லது குற்றம் செய்யப்படுகிறபோது, அது உடந்தையாயிருத்தல் குற்றமாகிறது.

குற்றம் செய்ய முயற்சிப்பதற்கான தண்டனை.

**18.** இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றம் எதனையும் செய்வதற்கு முயற்சிக்கிற அல்லது அத்தகைய குற்றம் செய்யப்படுமாறு செய்கிற மற்றும் அத்தகைய முயற்சியில் அந்தக் குற்றம் செய்யப்படும் பொருட்டு செயல் எதனையும் செய்கிற எவராயினும், ஆயுட்கால சிறைதண்டனையில் ஒருபாதி வரை நீடிக்கக் கூடிய ஒரு காலஅளவிற்கு அந்தக் குற்றத்திற்காக வகைசெய்யப்பட்டுள்ள சிறைதண்டனை வகை எதுவும் அல்லது நேர்வுக்கேற்ப அந்தக் குற்றத்திற்காக வகைசெய்யப்பட்டுள்ள ஒரு பாதி நீண்டகால சிறைதண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் V

### வழக்குகளை அறிக்கை செய்வதற்கான நடைமுறை

குற்றங்கள் பற்றி அறிக்கை செய்தல்.

2/1974. **19. (1)** குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 இல் அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின்படி குற்றம் ஒன்று அநேகமாக செய்யப்படக்கூடும் என்கின்ற அச்சத்தோடு இருக்கிற அல்லது அத்தகைய குற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்று அறிந்திருக்கிற (சிறார் உள்ளடங்கலான) நபர் எவரும், அத்தகைய தகவலை,–

(அ) சிறப்பு இளையோர் காவல்துறை அலகிடம்; அல்லது

(ஆ) உள்ளூர் காவல்துறையிடம்,

அளித்தல் வேண்டும்.

(2) Every report given under sub-section (1) shall be—

(a) ascribed an entry number and recorded in writing;

(b) be read over to the informant;

(c) shall be entered in a book to be kept by the Police Unit.

(3) Where the report under sub-section (1) is given by a child, the same shall be recorded under sub-section (2) in a simple language so that the child understands contents being recorded.

(4) In case contents are being recorded in the language not understood by the child or wherever it is deemed necessary, a translator or an interpreter, having such qualifications, experience and on payment of such fees as may be prescribed, shall be provided to the child if he fails to understand the same.

(5) Where the Special Juvenile Police Unit or local police is satisfied that the child against whom an offence has been committed is in need of care and protection, then, it shall, after recording the reasons in writing, make immediate arrangement to give him such care and protection including admitting the child into shelter home or to the nearest hospital within twenty-four hours of the report, as may be prescribed.

(6) The Special Juvenile Police Unit or local police shall, without unnecessary delay but within a period of twenty-four hours, report the matter to the Child Welfare Committee and the Special Court or where no Special Court has been designated, to the Court of Session, including need of the child for care and protection and steps taken in this regard.

(7) No person shall incur any liability, whether civil or criminal, for giving the information in good faith for the purpose of sub-section (1).

(2). (1) ஆம் உட்பிரிவின்படி அளிக்கப்படும் அறிக்கை ஒவ்வொன்றும்,—

(அ) பதிவு எண் வேண்டும்; குறிப்பிடப்பட்டு எழுத்துவடிவில் பதிவு செய்யப்படுதல்;

(ஆ) தகவல் அளிப்பவருக்கு படித்துக்காட்டப்படுதல் வேண்டும்;

(இ) காவல்துறை அலகில் வைத்துவரப்படும் புத்தகமொன்றில் பதியப்படுதல் வேண்டும்.

(3). (1) ஆம் உட்பிரிவின்படியான அறிக்கை, சிறாரினால் அளிக்கப்படுமிடத்து, அது பதிவு செய்யப்படுகின்றபோது அதில் உள்ளடக்கியுள்ள கருத்துக்கள், அந்தச் சிறார் புரிந்துகொள்ளும் வகையில் எளிய நடையில் (2) ஆம் உட்பிரிவின்படி பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(4) அறிக்கையில் உள்ளடக்கியுள்ள கருத்துக்கள் அச்சிறாரினால் புரிந்துகொள்ளமுடியாத மொழியில் பதிவு செய்யப்பட்டிருக்கும் நேர்வில், அச்சிறார் அதனை புரிந்து கொள்ள முடியாமல் போகுமானால் அல்லது அவசியமெனக் கருதப்படும் இடத்திலெல்லாம், வகுத்துரைக்கப்படலாகும் தகுதிகள், பட்டறிவினைக் கொண்டிருக்கிற மொழிபெயர்ப்பாளர் அல்லது வாய்வழி மொழிபெயர்ப்பவர் அதற்குரிய கட்டணங்களை வழங்கி அச்சிறாருக்கு ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

(5) எந்தச் சிறாருக்கு எதிராக குற்றம் செய்யப்பட்டதோ அந்தச் சிறாருக்கு உரிய பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படுகிறது என்று சிறப்பு இளையோர் காவல் அலகு அல்லது உள்ளூர் காவல்துறை தெளிவுறக்காணுமிடத்து, மேற்சொன்ன அலகு காவல்துறை, எழுத்து வடிவிலான காரணங்களை பதிவு செய்த பின்பு, அறிக்கை கிடைக்கப் பெற்ற இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் (அந்தச் சிறாரின் காப்பகத்தில் அல்லது அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்த்தல் உள்ளடங்கலாக) வகுத்துரைக்கப்படலாகும் உரிய பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு அச்சிறாருக்கு அளிப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(6) சிறப்பு இளையோர் காவல் அலகு அல்லது உள்ளூர் காவல்துறை தேவையற்ற காலத்தாழ்வு இல்லாமல், ஆனால், இருபத்து நான்குமணி நேரக்காலஅளவிற்குள், சிறார் நலக்குழுவிடம் மற்றும் சிறப்பு நீதிமன்றம் அல்லது சிறப்பு நீதிமன்றம் எதுவும் சுட்டியமர்த்தப்படாதவிடத்து, அமர்வு நீதிமன்றத்திற்கு சிறாரின் உரிய பராமரிப்பு மற்றும் பாதுகாப்பின் தேவை மற்றும் இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் உள்ளடங்கலான பொருட்பாட்டை தெரிவித்தல் வேண்டும்.

(7) நபர் எவரும், (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக நல்லெண்ணத்துடன் தகவல் அளித்ததற்காக, உரிமையியலாக இருப்பினும் அல்லது குற்றவியலாக இருப்பினும் கடப்பாடுடையவர் ஆகார்.

Obligation of media, studio and photographic facilities to report cases.

20. Any personnel of the media or hotel or lodge or hospital or club or studio or photographic facilities, by whatever name called, irrespective of the number of persons employed therein, shall, on coming across any material or object which is sexually exploitative of the child (including pornographic, sexually-related or making obscene representation of a child or children) through the use of any medium, shall provide such information to the Special Juvenile Police Unit, or to the local police, as the case may be.

Punishment for failure to report or record a case.

21. (1) Any person, who fails to report the commission of an offence under sub-section (1) of section 19 or section 20 or who fails to record such offence under sub-section (2) of section 19 shall be punished with imprisonment of either description which may extend to six months or with fine or with both.

(2) Any person, being in-charge of any company or an institution (by whatever name called) who fails to report the commission of an offence under sub-section (1) of section 19 in respect of a subordinate under his control, shall be punished with imprisonment for a term which may extend to one year and with fine.

(3) The provisions of sub-section (1) shall not apply to a child under this Act.

Punishment for false complaint or false information.

22. (1) Any person, who makes false complaint or provides false information against any person, in respect of an offence committed under sections 3, 5, 7 and section 9, solely with the intention to humiliate, extort or threaten or defame him, shall be punished with imprisonment for a term which may extend to six months or with fine or with both.

(2) Where a false complaint has been made or false information has been provided by a child, no punishment shall be imposed on such child.

**20.** ஊடகத்தின் அல்லது உணவகத்தின் அல்லது தங்கும் விடுதியின் அல்லது மருத்துவமனையின் அல்லது சங்கம் அல்லது படப்பிடிப்பகம் அல்லது படம்பிடிக்கும் வசதியுள்ள இடங்கள் அது எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும், அதில் பணிக்கமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொள்ளாமல், பணியாட்கள் எவரும், ஊடகம் எதனையும் பயன்படுத்துவதன் மூலம் (சிறார் அல்லது சிறார்களை இழிபொருள் ஓவியமாக காட்டுதல், பாலியல் தொடர்பாக அல்லது ஆபாசமாக எடுத்துக்காட்டுதல் உள்ளடங்கலாக) சிறாரை சுயநலத்திற்காக பாலியலாக பயன்படுத்தும் சாதனம் அல்லது பொருள் எதனையும் தற்செயலாக கண்டுபிடிப்பாரானால், அதனை இளையோர் சிறப்பு காவல் அலகு அல்லது, நேர்வுக்கேற்ப, உள்ளூர் காவல் நிலையத்திற்கு அத்தகைய தகவலை அளிக்க வேண்டும்.

நிகழ்வுகள் பற்றி அறிக்கை செய்வதற்கு ஊடகம், படப்பிடிப்பகம் மற்றும் படமெடுக்கும் வசதியுடைய இட–உரிமையாளர்களின் கடமைப் பொறுப்பு.

**21. (1).** 19 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் அல்லது 20 ஆம் பிரிவின்படியான குற்றம் ஒன்று செய்யப்பட்டது குறித்து அறிக்கை செய்ய தவறுகிற அல்லது 19 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி அத்தகைய குற்றத்தைப் பதிவுசெய்யத் தவறுகிற நபர் எவரும், ஒவ்வொரு குற்றச்செயலுக்கும் ஆறுமாதங்கள் வரை நீடிக்கலாகும் சிறைதண்டனை அல்லது அபராதமோ அல்லது இவை இரண்டுமோ விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

அறிக்கை பதிவு செய்யத் தவறுதல் அல்லது வழக்கு பதிவுசெய்ய தவறுதலுக்கான தண்டனை.

(2) நிறுமம் அல்லது நிறுவனம் எதனையும் (எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும்) தம் பொறுப்பில் கொண்டுள்ள நபர் எவரும், தம்முடைய கட்டுப்பாட்டில் கீழ்நிலையில் பணிபுரிபவர், 19 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படியான குற்றம் ஒன்றை செய்திருப்பது குறித்து அறிக்கை செய்யத் தவறுகிற போது, அவர் ஓராண்டு வரை நீடிக்கக்கூடிய ஒரு காலஅளவிற்கு சிறைதண்டனையும், அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(3). (1) ஆம் உட்பிரிவின் வகைமுறைகள் இந்தச் சட்டத்தின்படி சிறாருக்குப் பொருந்துதல் ஆகாது.

**22. (1)** 3, 5, 7, 9 ஆகிய பிரிவுகளின்படி செய்யப்பட்ட குற்றத்தை பொறுத்தமட்டில், அவமானப்படுத்தும், மிரட்டிப் பறிக்கும், அச்சுறுத்தும் அல்லது அவருக்கு அவதூறு செய்யும் எண்ணத்தினால் மட்டுமே நபர் எவருக்கும் எதிராக தவறான முறையீடு செய்கிற அல்லது தவறான தகவல் அளிக்கிற நபர் எவரும், ஆறுமாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலஅளவிற்குச் சிறைதண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

தவறான முறையீட்டிற்கான அல்லது தவறான தகவலுக்கான தண்டனை.

(2) ஒரு சிறாரினால் தவறான முறையீடு செய்யப்படுமிடத்து அல்லது தவறான தகவல் அளிக்கப்படுமிடத்து, அத்தகைய சிறாருக்கு தண்டனை எதுவும் விதிக்கப்படுதல் ஆகாது.

(3) Whoever, not being a child, makes a false complaint or provides false information against a child, knowing it to be false, thereby victimizing such child in any of the offences under this Act, shall be punished with imprisonment, which may extend to one year or with fine or with both.

Procedure for media.

23. (1) No person shall make any report or present comments on any child from any form of media or studio or photographic facilities without having complete and authentic information, which may have the effect of lowering his reputation or infringing upon his privacy.

(2) No reports in any media shall disclose, the identity of a child including his name, address, photograph, family details, school, neighbourhood or any other particulars which may lead to disclosure of identity of the child:

Provided that for reasons to be recorded in writing, the Special Court, competent to try the case under the Act, may permit such disclosure, if in its opinion such disclosure is in the interest of the child.

(3) The publisher or owner of the media or studio or photographic facilities shall be jointly and severally liable for the acts and omissions of his employee.

(4) Any person who contravenes the provisions of sub-section (1) or sub-section (2) shall be liable to be punished with imprisonment of either description for a period which shall not be less than six months but which may extend to one year or with fine or with both.

## CHAPTER VI

### PROCEDURES FOR RECORDING STATEMENT OF THE CHILD

Recording of statement of a child.

24. (1) The statement of the child shall be recorded at the residence of the child or at a place where he usually resides or at the place of his choice and as far as practicable by a woman police officer not below the rank of sub-inspector.

(2) The police officer while recording the statement of the child shall not be in uniform.

(3) சிறாராக இல்லாதிருக்கின்ற எவரும், அது தவறானது என்று அறிந்திருந்தும் சிறாருக்கு எதிராக தவறான முறையீடு செய்கிற அல்லது தவறான தகவல் அளிக்கிறவருமான எவராயினும், இந்தச் சட்டத்தின்படியான குற்றங்களில் எதிலும் அத்தகைய சிறாரைப் பாதிப்புக்கு உள்ளாக்குகிற எவராயினும், ஓராண்டு வரை நீடிக்கலாகும் சிறைதண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

ஊடகத்திற்கான நடைமுறை.

23. (1) நபர் எவரும், எந்தச் சிறாரைப் பற்றியும் ஊடகத்தின் வடிவம் எதிலும் அல்லது படப்பிடிப்பு நிலையம் அல்லது படப்பிடிப்பு வசதிகளின் மூலம் சிறாரின் நற்பெயருக்குக் களங்கம் உண்டாக்கும் அளவிற்கு அல்லது சிறாரின் தனித்தன்மைக்கு அத்துமீறி ஊறுவிளைவிக்கும் பொருட்டு செயற்படலாகும் முழுமையான மற்றும் நம்பகத்தகுந்த தகவலாக இல்லாதிருக்கும் நிலையில் தகவலை அறிக்கையாக அளித்தலோ அல்லது விமர்சனம் செய்தலோ ஆகாது.

(2) ஊடக அறிக்கை எதிலும் சிறாரின் பெயர், முகவரி, புகைப்படம், குடும்ப விவரங்கள், பள்ளி, சுற்றுவட்டாரம் அல்லது சிறாரின் அடையாளத்தினை வெளிப்படுத்துவதற்கு வழிகாட்டலாகும் பிற விவரங்கள் எவற்றையும் வெளியிடுதல் ஆகாது:

**வரம்புரையாக:** எழுத்து வடிவில் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக இந்தச் சட்டத்தின்படியான வழக்கை விசாரணை செய்வதற்கு தகுதிறமுடைய சிறப்பு நீதிமன்றம், அத்தகைய வெளியிடுகையானது சிறாரின் நலனுக்கானது என்று கருதுமானால்.

(3) ஊடகத்தின் வெளியீட்டாளர் அல்லது படப்பிடிப்பகத்தின் அல்லது படமெடுக்கும் வசதியுடைய இடத்தின் உரிமையாளர் தம்முடைய பணியாளரின் செய்கைகள் மற்றும் விடுகைகளுக்காக கூட்டாகவும், தனித்தனியாகவும் கடப்பாடுடையவராவார்.

(4). (1) ஆம் உட்பிரிவின் அல்லது (2) ஆம் உட்பிரிவின் வகைமுறைகளை மீறுகிற நபர் எவரும், ஆறுமாதங்களுக்குக் குறையாத ஆனால் ஓராண்டு வரை நீடிக்கக்கூடிய காலஅளவிற்குச் சிறைதண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் VI

### சிறாரின் வாக்குமூலத்தைப் பதிவு செய்வதற்கான நடைமுறைகள்

சிறாரின் வாக்கு மூலத்தைப் பதிவு செய்தல்.

24. (1) சிறாரின் வாக்குமூலம், சிறாரின் குடியிருப்பிடத்தில் அல்லது வழக்கமாக அவர் வசித்து வரும் இடத்தில் அல்லது அவர் விரும்பும் இடத்தில் மற்றும் நடைமுறைக்கு இயன்ற அளவு சார்பு ஆய்வாளர் படிநிலைக்குக் குறையாத பெண்காவல் அலுவலர் ஒருவரால் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) சிறாரின் வாக்குமூலத்தைப் பதிவு செய்கையில் காவல் அலுவலர் சீருடையில் இருத்தல் ஆகாது.

(3) The police officer making the investigation, shall, while examining the child, ensure that at no point of time the child come in the contact in any way with the accused.

(4) No child shall be detained in the police station in the night for any reason.

(5) The police officer shall ensure that the identity of the child is protected from the public media, unless otherwise directed by the Special Court in the interest of the child.

Recording of statement of a child by Magistrate.

25. (1) If the statement of the child is being recorded under section 164 of the Code of Criminal Procedure, 1973 (herein referred to as the Code), the Magistrate recording such statement shall, notwithstanding anything contained therein, record the statement as spoken by the child:

2/1974.

Provided that the provisions contained in the first proviso to sub-section (1) of section 164 of the Code shall, so far it permits the presence of the advocate of the accused shall not apply in this case.

(2) The Magistrate shall provide to the child and his parents or his representative, a copy of the document specified under section 207 of the Code, upon the final report being filed by the police under section 173 of that Code.

Additional provisions regarding statement to be recorded.

26. (1) The Magistrate or the police officer, as the case may be, shall record the statement as spoken by the child in the presence of the parents of the child or any other person in whom the child has trust or confidence.

(2) Wherever necessary, the Magistrate or the police officer, as the case may be, may take the assistance of a translator or an interpreter, having such qualifications, experience and on payment of such fees as may be prescribed, while recording the statement of the child.

(3) The Magistrate or the police officer, as the case may be, may, in the case of a child having a mental or physical disability, seek the assistance of a special educator or any person familiar with the manner of communication of the child or an expert in that field, having such qualifications, experience and on payment of such fees as may be prescribed, to record the statement of the child.

(3) புலன்விசாரணை செய்யும் காவல்துறை அலுவலர், சிறாரை ஆய்வு செய்கையில், குற்றம் சுமத்தப்பட்டவருடன் சிறார் எந்த வகையிலும் எந்த நேரத்திலும் பார்க்கவோ அல்லது தொடர்பு கொள்ளவோ இல்லை என்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

(4) எந்தச் சிறாரையும், எந்தக் காரணத்திற்காகவும் இரவு நேரத்தில் காவல் நிலையத்தில் வைத்திருத்தல் ஆகாது.

(5) காவல்துறை அலுவலர், சிறாரின் நலன் கருதி, சிறப்பு நீதிமன்றத்தினால் பிறவாறு உத்தரவிடப்பட்டிருந்தாலன்றி, பொது ஊடகத்தின் மூலம் சிறாரின் அடையாளம் காட்டப்படுவது தடுக்கப்பட்டிருக்கிறது என்பதனை உறுதி செய்தல் வேண்டும்.

2/1974. 25. (1) குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 இன் (இதன் பின்னர் தொகுப்புச்சட்டம் என்று குறிப்பிடப்படும்) 164 ஆம் பிரிவின்படி சிறாரின் வாக்குமூலம் பதிவு செய்யப்படுமானால், அத்தகைய வாக்குமூலத்தை பதிவு செய்யும் குற்றவியல் நடுவர், அதில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், சிறாரின் வாய்மொழி வாக்குமூலத்தை அப்படியே பதிவு செய்தல் வேண்டும்: குற்றவியல் நடுவரால் சிறாரின் வாக்குமூலம் பதிவு செய்யப்படுதல்.

**வரம்புரையாக:** தொகுப்புச் சட்டத்தின் 164 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் முதல் வரம்புரையில் அடங்கியுள்ள வகைமுறைகள், குற்றம் சுமத்தப்பட்டவரின் வழக்குரைஞர் இருப்பதற்கு அனுமதிக்கப்படுதல் இந்நிகழ்வுக்கு பொருந்துதல் ஆகாது.

(2) குற்றவியல் நடுவர், தொகுப்புச் சட்டத்தின் 173 ஆம் பிரிவின்படி காவலரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பின்னர், தொகுப்புச் சட்டத்தின் 207 ஆம் பிரிவின்படி குறித்துரைக்கப்பட்ட ஆவணத்தின் நகல் ஒன்றை சிறாருக்கு மற்றும் அவருடைய பெற்றோருக்கு அல்லது அதனுடைய சார்பாற்றுநருக்கு வழங்ககுதல் வேண்டும்.

26. (1) குற்றவியல் நடுவர் அல்லது, நேர்வுக்கேற்ப, காவல்துறை அலுவலர், சிறாரின் பெற்றோர் அல்லது சிறார் நல்லெண்ணம் அல்லது நம்பிக்கை வைத்துள்ள நபரின் முன்னிலையில் சிறாரினால் கூறப்படும் வாக்குமூலம் பதிவு செய்யப்படுதல் வேண்டும். பதிவு செய்யப்பட வேண்டிய வாக்குமூலம் தொடர்பான கூடுதல் வகை முறைகள்.

(2) அவசியமாகும் இடத்தெல்லாம், குற்றவியல் நடுவர் அல்லது நேர்வுக்கேற்ப, காவல்துறை அலுவலர், சிறாரின் வாக்குமூலத்தை பதிவு செய்கையில், வகுத்துரைக்கப்படலாகும் தகுதிகள், பட்டறிவைக் கொண்டிருக்கிற மொழிபெயர்ப்பாளர் அல்லது வாய்வழி மொழிபெயர்ப்பவருக்கு அதற்குரிய கட்டணங்களை வழங்கி அவருடைய உதவியைப் பெறலாம்.

(3) குற்றவியல் நடுவர் அல்லது நேர்வுக்கேற்ப காவல்துறை அலுவலர் சிறார் மனக்கோளாறு அல்லது உடல் ஊனமாக இருக்கும் நேர்வில், சிறாரின் வாக்குமூலத்தைப் பதிவுசெய்வதற்கு வகுத்துரைக்கப்படலாகும் தகுதிகள், பட்டறிவினைக் கொண்டிருக்கிற சிறப்பு கல்வியாளர் அல்லது சிறாரிடம் கருத்தினைப் பரிமாறத் தெரிந்த நபருக்கு அல்லது அந்தத் துறையிலுள்ள வல்லுநருக்கு அதற்குரிய கட்டணங்களை வழங்கி அவருடைய உதவியை நாடலாம்.

(4) Wherever possible, the Magistrate or the police officer, as the case may be, shall ensure that the statement of the child is also recorded by audio-video electronic means.

Medical examination of a child.

27. (1) The medical examination of a child in respect of whom any offence has been committed under this Act, shall, notwithstanding that a First Information Report or complaint has not been registered for the offences under this Act, be conducted in accordance with section 164A of the Code of Criminal Procedure, 2/1974.
1973 .

(2) In case the victim is a girl child, the medical examination shall be conducted by a woman doctor.

(3) The medical examination shall be conducted in the presence of the parent of the child or any other person in whom the child reposes trust or confidence.

Where, in case the parent of the child or other person referred to in sub-section (3) cannot be present, for any reason, during the medical examination of the child, the medical examination shall be conducted in the presence of a woman nominated by the head of the medical institution.

## CHAPTER VII

### SPECIAL COURTS

Designation of Special Courts.

28. (1) For the purposes of providing a speedy trial, the State Government shall in consultation with the Chief Justice of the High Court, by notification in the Official Gazette, designate for each district, a Court of Session to be a Special Court to try the offences under the Act:

Provided that if a Court of Session is notified as a children's court under the Commissions for Protection of Child Rights Act, 2005 or a 4/2006.
Special Court designated for similar purposes under any other law for the time being in force, then, such court shall be deemed to be a Special Court under this section.

(2) While trying an offence under this Act, a Special Court shall also try an offence [other than the offence referred to in sub-section (1)], with which the accused may, under the Code of Criminal 2/1974.
Procedure, 1973 be charged at the same trial.

(4) இயலக்கூடிய இடத்தெல்லாம் குற்றவியல் நடுவர் அல்லது நேர்வுக்கேற்ப, காவல்துறை அலுவலர் சிறாரின் வாக்குமூலம் மின்னணு முறையில் ஒலி—ஒளி மூலம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை உறுதி செய் வேண்டும்.

சிறாருக்கு மருத்துவ ஆய்வு செய்தல்.

27. (1) இந்தச் சட்டத்தின்படியான குற்றங்களுக்கான முதல் தகவல் அறிக்கை அல்லது முறையீடு பதிவு செய்யப்படாதிருந்த போதிலும், இந்தச் சட்டத்தின்படியான குற்றம் எதுவும், எந்தச் சிறார் பொறுத்து செய்யப்பட்டுள்ளதோ அந்தச் சிறார் தொடர்பான மருத்துவ ஆய்வு,
2/1974. குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 இன் 164 (அ) பிரிவிற்கிணங்க செய்யப்படுதல் வேண்டும்.

(2) பாதிக்கப்பட்ட சிறார் பெண் சிறாராக இருக்கும் நேர்வில், மருத்துவ ஆய்வு பெண் மருத்துவரால் செய்யப்படுதல் வேண்டும்.

(3) மருத்துவ ஆய்வு, சிறாரின் பெற்றோர் அல்லது சிறார் நல்லெண்ணம் அல்லது நம்பிக்கை வைத்துள்ள நபர் முன்னிலையில் செய்யப்படுதல் வேண்டும்.

(4) சிறாரின் பெற்றோர் அல்லது (3) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட பிற நபர், ஏதாவதொரு காரணத்தினால் எதற்காகவும் சிறாரின் மருத்துவ ஆய்வின் போது உடன் இருக்க இயலாதவிடத்து, மருத்துவ நிறுவனத்தின் தலைவரால் நியமனம் செய்யப்படும் பெண் ஒருவர் முன்னிலையில் மருத்துவ ஆய்வு செய்யப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் VII

## சிறப்பு நீதிமன்றங்கள்

சிறப்பு நீதிமன்றங்கள் சுட்டியமர்த்தப்படுதல்.

28. (1) விரைவாக விசாரணை செய்யும் நோக்கங்களுக்காக, மாநில அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கையின் வாயிலாக, உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து, இந்தச் சட்டத்தின்படியான குற்றங்களை விசாரணை செய்வதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமர்வு நீதிமன்றம் ஒன்று, சிறப்பு நீதிமன்றமாக சுட்டியமர்த்தப்படுதல் வேண்டும்:

**வரம்புரையாக:** சிறாரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான
4/2006. ஆணையங்கள் சட்டம், 2005 இன்படி அமர்வு நீதிமன்றம் ஒன்று சிறார்கள் நீதிமன்றமாக அறிவிக்கப்பட்டிருந்தால், அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதன்படியும், அதேபோன்ற நோக்கங்களுக்காக சிறப்பு நீதிமன்றமாகச் சுட்டியமர்த்தப்பட்டிருந்தால், அத்தகைய நீதிமன்றம், இந்தப் பிரிவின்படி சிறப்பு நீதிமன்றமாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) சிறப்பு நீதிமன்றம் இந்தச் சட்டத்தின்படியான குற்றம் ஒன்றை விசாரணை செய்கையில், குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம்,
2/1974. 1973 இன்படி குற்றம் சுமத்தப்பட்டுள்ள நபரை, அதே விசாரணையில் [(1) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட குற்றம் அல்லாத பிற] குற்றத்திற்காகவும் விசாரணை செய்தல் வேண்டும்.

(3) The Special Court constituted under this Act, notwithstanding anything in the Information Technology Act, 2000 shall have jurisdiction to try offences under section 67B of that Act in so far as it relates to publication or transmission of sexually explicit material depicting children in any act, or conduct or manner or facilitates abuse of children online. 21/2000.

Presumption as to certain offences.

29. Where a person is prosecuted for committing or abetting or attempting to commit any offence under sections 3, 5, 7 and section 9 of this Act, the Special Court shall presume, that such person has committed or abetted or attempted to commit the offence, as the case may be unless the contrary is proved.

Presumption of culpable mental state.

30. (1) In any prosecution for any offence under this Act which requires a culpable mental state on the part of the accused, the Special Court shall presume the existence of such mental state but it shall be a defence for the accused to prove the fact that he had no such mental state with respect to the act charged as an offence in that prosecution.

(2) For the purposes of this section, a fact is said to be proved only when the Special Court believes it to exist beyond reasonable doubt and not merely when its existence is established by a preponderance of probability.

*Explanation*.- In this section, "culpable mental state" includes intention, motive, knowledge of a fact and the belief in, or reason to believe, a fact.

Application of Code of Criminal Procedure, 1973 to proceedings before a Special Court.

31. Save as otherwise provided in this Act, the provisions of the Code of Criminal Procedure, 1973 (including the provisions as to bail and bonds)shall apply to the proceedings before a Special Court and for the purposes of the said provisions, the Special Court shall be deemed to be a court of Sessions and the person conducting a prosecution before a Special Court, shall be deemed to be a Public Prosecutor. 2/1974.

21/2000. (3) தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000 இல் உள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தச்சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றம் உடன்நிகழ்வில், சிறார்களைத் தவறாகப் பயன்படுத்தும் செயல் அல்லது நடத்தை அல்லது முறை அல்லது ஓவியமாகச் சித்தரித்துக் காட்டும் சங்கதிகளை பாலியல் காட்சிகளாக வெளியிடுதல் அல்லது அனுப்புதல் என்பது எந்த அளவுக்கு தொடர்புடையதாய் இருக்கிறதோ அந்த அளவுக்கு இந்தச் சட்டத்தின் 67 (ஆ) பிரிவின்படியான குற்றங்களை விசாரணை செய்வதற்கு அதிகாரவரம்பைக் கொண்டிருக்கும்.

**29.** இந்தச் சட்டத்தின் 3, 5, 7, 9 ஆகிய பிரிவுகளின் படியான குற்றம் எதனையும் செய்ததற்காக அல்லது செய்வதற்கு உடந்தையாயிருந்ததற்காக அல்லது செய்வதற்கு முயற்சி செய்ததற்காக நபர் ஒருவர் மீது குற்றவழக்கு தொடரப்படுமிடத்து, முரண்பாடானது மெய்ப்பிக்கப்பட்டாலன்றி, அத்தகைய நபர், அந்தக் குற்றத்தைச் செய்திருப்பதாக அல்லது அதற்கு உடந்தையாயிருந்ததாக அல்லது நேர்வுக்கேற்ப, அதனை செய்ய முயற்சி செய்திருப்பதாக சிறப்பு நீதிமன்றம் அனுமதித்தல் வேண்டும். ஒரு சில குற்றங்கள் குறித்த அனுமானம்.

**30. (1)** இந்தச் சட்டத்தின்படியான குற்றம் எதற்காகவும் குற்றவழக்கு தொடருகையில் அந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டவரின் செயல் குற்றமுறு மனநிலையுடையதாக இருக்க வேண்டும் என்கின்ற நிலையில், சிறப்பு நீதிமன்றம் அக்குற்றம் சுமத்தப்பட்டவர் அத்தகைய மனநிலையில் இருப்பதாகவே அனுமானித்தல் வேண்டும்; ஆனால், அந்தக் குற்ற வழக்கில் குற்றம் என சுமத்தப்பட்ட செயல் பொறுத்து அவருக்கு அத்தகைய மனநிலை எதுவும் இருக்கவில்லை என்று மெய்ப்பிப்பது குற்றம் சுமத்தப்பட்டவருக்கான எதிர்வாதமாக இருத்தல் வேண்டும். குற்றமுறு மனநிலையின் அனுமானம்.

(2) இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, சிறப்பு நீதிமன்றம் பொருண்மை நியாயமான ஐயத்திற்கு அப்பாற்பட்டு இருக்கிறது என்று நம்புகிற போது மட்டுமே மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்றும் மற்றும் அதில் நிகழ்தற்குரிய கூறுகள் பெரிதும் மிகுந்திருக்கிறது என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்பதனால் மட்டுமே அந்தப் பொருண்மை மெய்ப்பிக்கப்பட்டதாகக் கூறமுடியாது.

**விளக்கம்.–** இந்தப் பிரிவில், ‘‘குற்றமுறு மனநிலை’’ என்பது, உட்கருத்து, உள்நோக்கம், பொருண்மை பற்றி அறிந்திருத்தல் மற்றும் பொருண்மை ஒன்றினைப்பற்றிய நம்பிக்கை அல்லது அதை நம்புவதற்கான காரணம் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கும்.

**31.** இந்தச் சட்டத்தில் பிறவாறு வகை செய்யப்பட்டவாறல்லாமல், (பிணை மற்றும் பிணைமுறிகள் குறித்த வகைமுறைகள் உள்ளடங்கலாக) குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 இன் வகைமுறைகள், சிறப்பு நீதிமன்றத்தின் முன்பான நடவடிக்கைகளுக்குப் பொருந்தும் மற்றும் மேற்சொன்ன வகைமுறைகளின் நோக்கங்களுக்காக, சிறப்பு நீதிமன்றம் ஒரு அமர்வு நீதிமன்றமாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் சிறப்பு நீதிமன்றம் ஒன்றின் முன்பு குற்றவழக்கு ஒன்றை நடத்தும் நபர் அரசு குற்றவியல் வழக்குரைஞராகக் கொள்ளப்படுவார். சிறப்பு நீதிமன்றத்தின் முன்பான நடவடிக்கைகளுக்கு, குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 இன் பொருந்துகை.

2/1974.

Special Public Prosecutors.

32. (1) The State Government shall, by notification in the Official Gazette, appoint a Special Public Prosecutor for every Special Court for conducting cases only under the provisions of this Act.

(2) A person shall be eligible to be appointed as a Special Public Prosecutor under sub-section (1) only if he had been in practice for not less than seven years as an advocate.

(3) Every person appointed as a Special Public Prosecutor under this section shall be deemed to be a Public Prosecutor within the meaning of clause (*u*) of section 2 of the Code of Criminal Procedure, 1973 and provision of that Code shall have effect accordingly. 2/1974.

## CHAPTER VIII

## PROCEDURE AND POWERS OF SPECIAL COURTS AND RECORDING OF EVIDENCE

Procedure and powers of Special Court.

33. (1) A Special Court may take cognizance of any offence, without the accused being committed to it for trial, upon receiving a complaint of facts which constitute such offence, or upon a police report of such facts.

(2) The Special Public Prosecutor, or as the case may be, the counsel appearing for the accused shall, while recording the examination-in-chief, cross-examination or re-examination of the child, communicate the questions to be put to the child to the Special Court which shall in turn put those questions to the child.

(3) The Special Court may, if it considers necessary, permit frequent breaks for the child during the trial.

(4) The Special Court shall create a child-friendly atmosphere by allowing a family member, a guardian, a friend or a relative, in whom the child has trust or confidence, to be present in the court.

32. (1) மாநில அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படியான வழக்குகளை மட்டுமே நடத்துவதற்காக சிறப்பு நீதிமன்றம் ஒவ்வொன்றுக்கும், அரசு சிறப்பு குற்றவியல் வழக்குரைஞரை அமர்த்துதல் வேண்டும். அரசு சிறப்பு குற்றவியல் வழக்குரைஞர்கள்.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி ஏழு ஆண்டுகளுக்குக் குறையாமல் வழக்குரைஞராக தொழிலாற்றியிருந்தால் மட்டுமே அரசு சிறப்பு குற்றவியல் வழக்குரைஞராக அமர்த்தப்படுவதற்கு தகுதியுடையவராவார்.

(3) இந்தப் பிரிவின்படி அரசு சிறப்பு குற்றவியல் வழக்குரைஞராக அமர்த்தப்படும் நபர் ஒவ்வொருவரும், குற்றவியல் நெறிமுறைத்
2/1974. தொகுப்புச் சட்டம், 1973 இன் 2 ஆம் பிரிவின் (ப) கூறின் பொருளின்படி அரசு குற்றவியல் வழக்குரைஞராகக் கொள்ளப்படுவார் மற்றும் அந்தத் தொகுப்புச் சட்டத்தின் வகைமுறை அதன்படியே செல்திறம் பெறும்.

## அத்தியாயம் VIII

## சிறப்பு நீதிமன்றங்களின் நடைமுறை மற்றும் அதிகாரங்கள் மற்றும் சான்றினைப் பதிவு செய்தல்

33. (1) குற்றமாக அமைகிற பொருண்மைகள் உடைய முறையீட்டினை பெற்றதன் பேரில் அல்லது அத்தகைய பொருண்மைகள் பற்றிய காவல் அறிக்கையின் பேரில் குற்றம் சுமத்தப்பட்டவர் சிறப்பு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படாத நிலையிலும் சிறப்பு நீதிமன்றம், குற்றத்திற்கான விசாரணைக்கு அழைக்காமல் குற்றம் எதனையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளலாம். சிறப்பு நீதிமன்றத்தின் நடைமுறை மற்றும் அதிகாரங்கள்.

(2) அரசு சிறப்பு குற்றவியல் வழக்குரைஞர் அல்லது நேர்வுக்கேற்ப, குற்றம் சுமத்தப்பட்டவருக்காக முன்னிலையாகும் வழக்குரைஞர் சிறாரிடம் முதல் விசாரணை, குறுக்கு விசாரணை அல்லது மறு விசாரணையை பதிவு செய்கையில் சிறாரிடம் கேட்கப்படும் கேள்விகளை சிறப்பு நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்துதல் வேண்டும். அந்நீதிமன்றம் முறைப்படி அந்தக் கேள்விகளை சிறாரிடம் கேட்டல் வேண்டும்.

(3) விசாரணையின் போது சிறப்பு நீதிமன்றம் அவசியமெனக் கருதினால் சிறாருக்கு அடிக்கடி இடைவேளை எடுத்துக்கொள்வதற்கு அனுமதிக்கலாம்.

(4) சிறப்பு நீதிமன்றம், சிறாரின் குடும்ப உறுப்பினர், காப்பாளர், நண்பர் அல்லது உறவினர் ஆகியோரில் எவரிடம் சிறார் நல்லெண்ணம் அல்லது நம்பிக்கை வைத்துள்ளாரோ அவரை நீதிமன்றத்தில் இருப்பதற்கு அனுமதியளிப்பதன் மூலம் சிறாருக்கு நேசமான சூழ்நிலையை உருவாக்குதல் வேண்டும்.

(5) The Special Court shall ensure that the child is not called repeatedly to testify in the court.

(6) The Special Court shall not permit aggressive questioning or character assassination of the child and ensure that dignity of the child is maintained at all times during the trial.

(7) The Special Court shall ensure that the identity of the child is not disclosed at any time during the course of investigation or trial:

Provided that for reasons to be recorded in writing, the Special Court may permit such disclosure, if in its opinion such disclosure is in the interest of the child.

*Explanation*.-For the purposes of this sub-section, the identity of the child shall include the identity of the child's family, school, relatives, neighbourhood or any other information by which the identity of the child may be revealed.

(8) In appropriate cases, the Special Court may, in addition to the punishment, direct payment of such compensation as may be prescribed to the child for any physical or mental trauma caused to him or for immediate rehabilitation of such child.

(9) Subject to the provisions of this Act, a Special Court shall, for the purpose of the trial of any offence under this Act, have all the powers of a Court of Session and shall try such offence as if it were a Court of Session, and as far as may be, in accordance with the procedure specified in the Code of Criminal Procedure, 1973 for trial 2/1974. before a Court of Session.

Procedure in case of commission of offence by child and determination of age by Special Court.

34. (1) Where any offence under this Act is committed by a child, such child shall be dealt with under the provisions of [1][the Juvenile 2/2016. Justice (Care and Protection of Children) Act, 2015 ].

1. Subs. by Act 25 of 2019, s. 9, for "the Juvenile Justice (Care and Protection of Children) Act, 2000 (56 of 2000)" (w.e.f. 16- 08-2019).

**(5)** நீதிமன்றத்தில் சாட்சியளிப்பதற்கு சிறார் திரும்பத் திரும்ப அழைக்கப்படவில்லை என்பதை சிறப்பு நீதிமன்றம் உறுதி செய்தல் வேண்டும்.

**(6)** சிறப்பு நீதிமன்றம், விசாரணையின் போது சிறாரிடம் கடுமையான கேள்விகள் கேட்கப்படுவதை அல்லது அதன் மதிப்பைக் குலைக்கும் முயற்சியை அனுமதித்தல் ஆகாது மற்றும் அனைத்து நேரங்களிலும் சிறாரின் கண்ணியம் பேணப்பட்டது என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

**(7)** புலன்விசாரணை அல்லது விசாரணையின் போது எந்த நேரத்திலும், சிறாரின் அடையாளம் வெளியிடப்படவில்லை என்பதை சிறப்பு நீதிமன்றம் உறுதி செய்தல் வேண்டும்:

**வரம்புரையாக:** எழுத்து வடிவில் பதிவுசெய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக, சிறப்பு நீதிமன்றம், அத்தகையவாறு வெளிப்படுத்துதல் சிறாரின் நலனுக்கானது என்று கருதுமானால், அத்தகையவாறு வெளிப்படுத்துதலை அனுமதிக்கலாம்.

**விளக்கம்.—** இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்காக, சிறாரின் அடையாளம், சிறாரின் குடும்பம், பள்ளிக்கூடம், உறவினர்கள், சுற்றுவட்டாரம் அல்லது சிறாரின் அடையாளம் பற்றி வெளியிடப்படலாகும் பிற தகவல் எதனையும் உள்ளடக்குவதாக இருக்கும்.

**(8)** உரிய வழக்குகளில், சிறப்பு நீதிமன்றம், தண்டனையோடு சிறாருக்கு ஏற்படுத்தப்பட்ட உடற்காயம் அல்லது மனஅதிர்ச்சி எதற்காகவும் அல்லது அத்தகைய சிறாரின் உடனடி மறுவாழ்வுக்காக வகுத்துரைக்கப்படலாகும் இழப்பீடு வழங்குமாறு பணிக்கலாம்.

**(9)** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, சிறப்பு நீதிமன்றம், இந்தச் சட்டத்தின்படியான குற்றம் எதற்குமான விசாரணையின் பொருட்டு அமர்வு நீதிமன்றத்தின் அதிகாரங்கள் அனைத்தையும் பெற்றிருக்கும் மற்றும் இது ஒரு அமர்வு நீதிமன்றமாக இருந்தாற்போன்றும் எந்த அளவுக்குக் கூடுமோ அந்த அளவுக்கு, ஒரு அமர்வு நீதிமன்றத்தின் முன்புள்ள விசாரணைக்காக குற்றவியல்
2/1974. நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், **1973** இல் குறித்துரைக்கப்பட்ட நடைமுறைக்கு இணங்கவும் அத்தகைய குற்றத்தை விசாரணை செய்தல் வேண்டும்.

சிறாரினால் செய்யப்படும் குற்றத்தைப் பொறுத்த வரையிலான நடைமுறை மற்றும் சிறப்பு நீதிமன்றத்தினால் சிறாரின் வயது முடிவு செய்யப்படுதல்.

**34. (1)** இந்தச் சட்டத்தின்படியான குற்றம் எதுவும், சிறாரினால்
2/2016. செய்யப்படுமிடத்து, [1][இளைஞர் நீதிச் (சிறார்களைப் பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல்) சட்டம், **2015**] இன் வகைமுறைகளின்படி அத்தகைய சிறார் மீது நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

1. சட்ட எண் 25/2019 இன் 9 ஆம் பிரிவினால் ''இளைஞர் நீதிச் (சிறார்களைப் பாராமரித்தல் மற்றும் பாதுகாத்தல்) சட்டம், 2000 (56/2000)'' என்பதற்கு, மாற்றாக (16–08–2019 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

(2) If any question arises in any proceeding before the Special Court whether a person is a child or not, such question shall be determined by the Special Court after satisfying itself about the age of such person and it shall record in writing its reasons for such determination.

(3) No order made by the Special Court shall be deemed to be invalid merely by any subsequent proof that the age of a personas determined by it under sub-section (2) was not the correct age of that person.

Period for recording of evidence of child and disposal of case.

35. (1) The evidence of the child shall be recorded within a period of thirty days of the Special Court taking cognizance of the offence and reasons for delay, if any, shall be recorded by the Special Court.

(2) The Special Court shall complete the trial, as far as possible, within a period of one year from the date of taking cognizance of the offence.

Child not to see accused at the time of testifying.

36. (1) The Special Court shall ensure that the child is not exposed in anyway to the accused at the time of recording of the evidence, while at the same time ensuring that the accused is in a position to hear the statement of the child and communicate with his advocate.

(2) For the purposes of sub-section (1), the Special Court may record the statement of a child through video conferencing or by utilising single visibility mirrors or curtains or any other device.

Trials to be conducted in camera.

37. The Special Court shall try cases in camera and in the presence of the parents of the child or any other person in whom the child has trust or confidence:

Provided that where the Special Court is of the opinion that the child needs to be examined at a place other than the court, it shall proceed to issue a commission in accordance with the provisions of section 284 of the Code of Criminal Procedure, 1973. 2/1974.

(2) சிறப்பு நீதிமன்றத்தின் முன்பான நடவடிக்கை எதிலும், அந்த நபர் சிறாரா அல்லது இல்லையா என்ற வினா எதுவும் எழுமானால், அத்தகைய நபரின் வயது குறித்து சிறப்பு நீதிமன்றம் மனநிறைவடைந்த பின்பு, முடிவு செய்து அவ்வாறு முடிவு செய்ததற்கான காரணங்களை எழுத்து வடிவில் பதிவு செய்தல் வேண்டும்.

(3) சிறப்பு நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட ஆணை எதுவும், (2) ஆம் உட்பிரிவின்படி அதனால் முடிவு செய்யப்பட்ட அந்த நபரின் வயது, அந்த நபரின் சரியான வயது இல்லை என்ற பிந்திய மெய்ப்பிப்பினால் மட்டும் அது செல்லத்தக்கதன்று என்று கொள்ளப்படுதல் ஆகாது.

சிறாரின் சான்றினைப் பதிவுசெய்வதற்கான மற்றும் வழக்கை முடித்து வைப்பதற்கான காலஅளவு.

**35.** **(1)** சிறாரின் சான்று, சிறப்பு நீதிமன்றம் குற்றத்தை விசாரணைக்காக எடுத்துக் கொண்டபின் முப்பது நாட்கள் காலஅளவிற்குள் பதிவுசெய்தல் வேண்டும் மற்றும் காலத்தாழ்வுக்கான காரணங்கள், எவையேனுமிருப்பின், அது சிறப்பு நீதிமன்றத்தினால் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) சிறப்பு நீதிமன்றம், இயன்றவரை குற்றத்தை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட தேதியிலிருந்து ஓராண்டு காலஅளவிற்குள் முடிக்க வேண்டும்.

சாட்சியமளிக்கும் நேரத்தில் சிறார் குற்றம் சுமத்தப்பட்ட- வரைக் காணுதல் ஆகாது.

**36.** **(1)** சிறப்பு நீதிமன்றம், சான்று பதிவு செய்யப்படும் நேரத்தில் குற்றம் சுமத்தப்பட்டவருக்கு எந்த வகையிலும் சிறார் காட்டப்படவில்லை என்பதையும் அதே நேரத்தில், குற்றம் சுமத்தப்பட்டவர் சிறாரின் வாக்குமூலத்தை கேட்கும் நிலையில் இருந்தார் மற்றும் அதை தமது வழக்குரைஞரிடம் தெரிவித்தார் என்பதையும் உறுதி செய்தல் வேண்டும்.

(2). (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, சிறப்பு நீதிமன்றம், காணொலிக் காட்சி வாயிலாக அல்லது ஒருபுறம் மட்டும் தெரியக் கூடிய கண்ணாடிகளை பயன்படுத்துவதன் மூலம் அல்லது திரைகள் அல்லது பிற சாதனம் எதன் மூலமாகவும் சிறாரின் வாக்குமூலத்தை பதிவு செய்யலாம்.

விசாரணை அந்தரங்கமாக நடத்தப்பட வேண்டும்.

**37.** சிறப்பு நீதிமன்றம் வழக்குகளை அந்தரங்கமாகவும் சிறாரின் பெற்றோர் அல்லது எவரிடம் சிறார் நல்லெண்ணம் அல்லது நம்பிக்கை வைத்துள்ளாரோ அந்த பிற நபர் முன்னிலையிலும் விசாரணை செய்ய வேண்டும்:

**வரம்புரையாக:** அந்தச் சிறார் நீதிமன்றம் அல்லாத பிற இடத்தில் ஆய்வு செய்யப்பட வேண்டியதாயுள்ளது என்று சிறப்பு நீதிமன்றம் கருதுகிறவிடத்து, அது குற்றவியல் நெறிமுறை தொகுப்புச் சட்டம்,
2/1974. 1973 இன் 284 ஆம் பிரிவின் வகைமுறைகளுக்கிணங்க, ஆணை ஒன்றைப் பிறப்பிக்க முற்பட வேண்டும்.

Assistance of an interpreter or expert while recording evidence of child.

38. (1) wherever necessary, the Court may take the assistance of a translator or interpreter having such qualifications, experience and on payment of such fees as may be prescribed, while recording the evidence of the child.

(2) If a child has a mental or physical disability, the Special Court may take the assistance of a special educator or any person familiar with the manner of communication of the child or an expert in that field, having such qualifications, experience and on payment of such fees as may be prescribed to record the evidence of the child.

## CHAPTER IX

### MISCELLANEOUS

Guidelines for child to take assistance of experts, etc.

39. Subject to such rules as may be made in this behalf, the State Government shall prepare guidelines for use of non-governmental organisations, professionals and experts or persons having knowledge of psychology, social work, physical health, mental health and child development to be associated with the pre-trial and trial stage to assist the child.

Right of child to take assistance of legal practitioner.

40. Subject to the proviso to section 301 of the Code of Criminal Procedure, 1973 the family or the guardian of the child shall be entitled to the assistance of a legal counsel of their choice for any offence under this Act: 2/1974.

Provided that if the family or the guardian of the child are unable to afford a legal counsel, the Legal Services Authority shall provide a lawyer to them.

Provisions of sections 3 to 13 not to apply in certain cases.

41. The provisions of sections 3 to 13 (both inclusive) shall not apply in case of medical examination or medical treatment of a child when such medical examination or medical treatment is undertaken with the consent of his parents or guardian.

**38. (1)** அவசியமாக இருக்கின்ற இடத்திலெல்லாம், நீதிமன்றம், சிறாரின் சாட்சியத்தை பதிவு செய்கையில், வகுத்துரைக்கப்படலாகும் தகுதிகள், பட்டறிவைக் கொண்டுள்ள மொழிபெயர்ப்பாளரின் அல்லது வாய்வழி மொழிபெயர்ப்பவரின் உதவியை அத்தகைய கட்டணங்களை வழங்குவதின் பேரில் பெறலாம்.

சிறாரின் சான்றினை பதிவு செய்கையில் வாய்வழி மொழி பெயர்ப்பவரின் அல்லது வல்லுநரின் உதவியைப் பெறுதல்.

**(2)** சிறாருக்கு மனக்கோளாறு அல்லது உடல் ஊனம் இருக்குமானால் சிறப்பு நீதிமன்றம், சிறாரின் வாக்குமூலத்தை பதிவுசெய்வதற்கு வகுத்துரைக்கப்படலாகும் தகுதிகள், பட்டறிவைக் கொண்டிருக்கிற சிறப்புக் கல்வியாளர் அல்லது சிறாரிடம் கருத்தினைப் பரிமாறத் தெரிந்த நபருக்கு அல்லது அந்தத் துறையில் உள்ள வல்லுநருக்கு அதற்குள்ள கட்டணங்களை வழங்கி அவருடைய உதவியை நாடலாம்.

## அத்தியாயம் IX

### பல்வகைப்பட்டவை

**39.** இதன் பொருட்டு செய்யப்படலாகும் விதிகளுக்கு உட்பட்டு, மாநில அரசு, சிறாரை விசாரணை செய்வதற்கு முன்பும், விசாரணை நிலையிலும் தொடர்புடையதாக இருக்கிற உளவியல், சமூகப்பணி, உடல்நலம், மனநலம், சிறார் வளர்ப்பு ஆகியவற்றில் அறிவும் திறமையும் பெற்றிருக்கிற அரசு சாரா அமைப்புகள், தொழிலாற்றுநர்கள் மற்றும் வல்லுநர்கள் அல்லது நபர்களைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிகளை உருவாக்குதல் வேண்டும்.

வல்லுநர்கள் முதலியோரின் உதவியைப் பெறுவதற்கு சிறார்களுக்கான வழிகாட்டு நெறிகள்.

2/1974. **40.** குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 இன் 301 ஆம் பிரிவின் வரம்புரைக்கு உட்பட்டு, சிறாரின் குடும்பத்தினர் அல்லது காப்பாளர் இந்தச் சட்டத்தின்படியான குற்றம் எதற்காகவும் அவர்களின் விருப்பப்படி வழக்குரைஞரின் உதவியைப் பெறுவதற்கு உரிமையுடையவராவர்:

சட்டத் தொழிலாற்றுநரின் உதவியைப் பெறுவதற்கு சிறாருக்குரிய உரிமை.

**வரம்புரையாக:** சிறாரின் குடும்பத்தினர் அல்லது காப்பாளர் வழக்குரைஞரை அமர்த்துவதற்கு இயலாத நிலையில் இருப்பார்களானால், சட்டப் பணிகள் அதிகாரஅமைப்பு அவர்களுக்கு வழக்குரைஞரை அமர்த்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

**41.** சிறாரின் மருத்துவ ஆய்வு அல்லது மருத்துவ சிகிச்சையைப் பொறுத்தவரை, அத்தகைய மருத்துவ ஆய்வு அல்லது மருத்துவ சிகிச்சை அச்சிறாரின் பெற்றோர் அல்லது காப்பாளர்கள் இசைவுடன் மேற்கொள்ளப்படும் போது 3 முதல் 13 வரையுள்ள பிரிவுகளின் வகைமுறைகள், (இரண்டும் உள்ளடங்கலாக) பொருந்தாது.

ஒரு சில வழக்குகளில் 3 முதல் 13 வரையுள்ள பிரிவுகளின் வகை முறைகள் பொருந்தாது.

Alternate punishment.

[1][42. Where an act or omission constitutes an offence punishable under this Act and also under sections 166A, 354A, 354B, 354C, 354D, 370, 370A, 375, 376, [2][376A, 376AB 376B, 376C, 376D, 376DA, 376DB], [3][376E, section 509 of the Indian Penal Code or section 67B of the Information Technology Act, 2000], then, notwithstanding anything contained in any law for the time being in force, the offender found guilty of such offence shall be liable to punishment only under this Act or under the Indian Penal Code as provides for punishment which is greater in degree.

21/2000.

Act not in derogation of any other law.

42A. The provisions of this Act shall be in addition to and not in derogation of the provisions of any other law for the time being in force and, in case of any inconsistency, the provisions of this Act shall have overriding effect on the provisions of any such law to the extent of the inconsistency.]

Public awareness about Act.

43. The Central Government and every State Government, shall take all measures to ensure that—

(a) the provisions of this Act are given wide publicity through media including the television, radio and the print media at regular intervals to make the general public, children as well as their parents and guardians aware of the provisions of this Act;

(b) the officers of the Central Government and the State Governments and other concerned persons (including the police officers) are imparted periodic training on the matters relating to the implementation of the provisions of the Act.

---

1. Subs. by Act 13 of 2013, s. 29, for s. 42 (w.e.f. 3-2-2013).

2. Subs. by Act 22 of 2018, s. 25, for "376A, 376C, 376D" (w.e.f. 21-4-2018).

3. Subs. by Act 25 of 2019, s. 10, for "376E or section 509 of the Indian Penal Code (45 of 1860)" (w.e.f. 16-08-2019).

[1][42. செய்கை அல்லது விடுகை இந்தச் சட்டத்தின்படி மற்றும் இந்தியத்தண்டனை (தொகுப்பு)ச் சட்டத்தின் 166 (அ), 354 (அ), 354 (ஆ), 354(இ), 354(ஈ), 370, 370(அ), 375, 376, [2][376(அ), 376 (அ)(ஆ) ,376 (ஆ), 376(இ) , 376(ஈ) , 376 (ஈ)(அ), 376 (ஈ) (ஆ) ], [3][376(உ), 509 ஆம் பிரிவுகளின்படியோ அல்லது தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000 இன் 67 (ஆ) பிரிவின்படியோ] தண்டிக்கப்படத்தக்க குற்றமாக அமைகிறவிடத்து, மேலும், அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அத்தகைய குற்றத்தைச் செய்திருக்கும் நபர், குற்றவாளி என்று முடிவு செய்யப்பட்டதும் இந்தச் சட்டத்தின்படியோ அல்லது இந்தியத் தண்டனை (தொகுப்பு)ச் சட்டத்தின்படியோ வகைசெய்யப்பட்டுள்ள அதிகப்படியான தண்டனைக்கு உள்ளாதல் வேண்டும். மாற்று தண்டனை.

21/2000.

42 (அ) . இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதனின் வகைமுறைகளுக்கு கூடுதலாக இருக்கும் மற்றும் அவற்றைக் குறைவுறச் செய்தல் ஆகாது, மேலும் முரணாக எதுவும் இருக்கும் நேர்வில், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், முரணாக இருக்கும் அளவிற்கு, அத்தகைய சட்டம் எதனின் வகைமுறைகள் மீதூர்ந்து இயங்கும் தன்மையுடையனவாகும்.] இச்சட்டம், பிற சட்டம் எதனையும் குறைவுறச் செய்தல் ஆகாது

43. மைய அரசு மற்றும் மாநில அரசு ஒவ்வொன்றும்,— பொதுமக்களிடம் சட்டம் பற்றிய விழிப்புணர்வு.

(அ) இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் பற்றிய விழிப்புணர்வை பொதுமக்கள், சிறார்கள் அதைப் போல் பெற்றோர், காப்பாளர் ஆகியோர்களிடம் ஏற்படுத்தும் பொருட்டு அச்சு ஊடகம், தொலைக்காட்சி, வானொலி உள்ளடங்கலான ஊடகம் வாயிலாக முறையான இடைவேளைகளில் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் பரவலாக விளம்பரப்படுத்தப்பட்டது;

(ஆ) மைய அரசின் மற்றும் மாநில அரசுகளின் அலுவலர்கள் மற்றும் (காவல்துறை அலுவலர்கள் உள்ளடங்கலாக) பிற தொடர்புடைய நபர்களுக்கு இந்தச்சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துதல் தொடர்பான பொருட்பாடுகள் பொறுத்து, காலமுறை பயிற்சி அளிக்கப்பட்டது. என்பதைஉறுதிசெய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

---

1. சட்ட எண் 13/2013 இன் 29 ஆம் பிரிவினால் 42 ஆம் பிரிவிற்கு மாற்றாக (03—02—2013 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

2. சட்ட எண் 22/2018 இன் 25 ஆம் பிரிவினால் " 376(அ), 376(இ), 376(ஈ)" என்பதற்கு, மாற்றாக (21—04—2018 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

3. சட்ட எண் 25/2019 இன் 10 ஆம் பிரிவினால், இந்தியத் தண்டனைச் சட்டத் தொகுப்பின் (45/1860) 376 (உ) அல்லது 509 ஆம் பிரிவு என்பதற்கு, மாற்றாக (16—08—2019 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

Monitoring of implementation of Act.

44. (1) The National Commission for Protection of Child Rights constituted under section 3, or as the case may be, the State Commission for Protection of Child Rights constituted under section 17, of the Commissions for Protection of Child Rights Act, 2005 shall, in addition to the functions assigned to them under that Act, also monitor the implementation of the provisions of this Act in such manner as may be prescribed. 4/2006.

(2) The National Commission or, as the case may be, the State Commission, referred to in sub-section (1), shall, while inquiring into any matter relating to any offence under this Act, have the same powers as are vested in it under the Commissions for Protection of Child Rights Act, 2005. 4/2006.

(3) The National Commission or, as the case may be, the State Commission, referred to in sub-section (1), shall, also include, its activities under this section, in the annual report referred to in section 16 of the Commissions for Protection of Child Rights Act, 2005. 4/2006.

Power to make rules.

45. (1) The Central Government may, by notification in the Official Gazette, make rules for carrying out the purposes of this Act.

(2) In particular, and without prejudice to the generality of the foregoing powers, such rules may provide for all or any of the following matters, namely:—

[1][(*a*) the manner of deleting or destroying or reporting about pornographic material in any form involving a child to the designated authority under sub-section (1) of section 15;

(*aa*) the manner of reporting about pornographic material in any form involving a child under sub-section (2) of section 15;]

---

1. Ins. by Act 25 of 2019, s. 11 (w.e.f. 16-08-2019).

**44. (1)** சிறாரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஆணையங்கள் சட்டம், **2005** இன் **3** ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட சிறாரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய ஆணையம் அல்லது நேர்வுக்கேற்ப, **17** ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட சிறாரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கானமாநில ஆணையம், அந்தச் சட்டத்தின்படி அவற்றிற்கு குறித்தளிக்கப்பட்ட செயற்பணிகளோடு சேர்த்து மேலும் வகுத்துரைக்கப்படலாகும் முறையில் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் செயற்படுத்தப்படுவதைக் கண்காணித்தல்வேண்டும். சட்டம் செயற்படுத்தப் படுவதைக் கண்காணித்தல்.

4/2006.

**(2). (1)** ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட தேசிய ஆணையம் அல்லது நேர்வுக்கேற்ப, மாநிலஆணையம், இந்தச் சட்டத்தின்படியான குற்றம் எதுவும் தொடர்பான பொருட்பாடு எதனையும் விசாரணை செய்கையில், சிறாரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஆணையங்கள் சட்டம், **2005** இன்படி அதனிடம் உற்றமைந்திருக்கின்றவாறான அதே அதிகாரங்களைக் கொண்டதாகும்.

4/2006.

**(3). (1)** ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட தேசிய ஆணையம் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநில ஆணையம் சிறாரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஆணையங்கள் சட்டம், **2005** இன் **16** ஆம் பிரிவில் சுட்டப்பட்ட ஆண்டு அறிக்கையில் இந்தப் பிரிவின்படியான அதனுடைய நடவடிக்கைகளும்கூட உள்ளடங்கியிருத்தல் வேண்டும்.

4/2006.

**45. (1)** மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம். விதிகளைச் செய்வதற்கு அதிகாரம்.

**(2)** குறிப்பாகவும், முன்சென்ற அதிகாரங்களின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்காகவும் அல்லது அவற்றில் எதற்காகவும் அத்தகைய விதிகளைச் செய்யலாம், அவையாவன:—

[1][(அ) **15** ஆம் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவின்படி ஒரு சிறாரை உட்படுத்தும் இழிபொருள் ஓவியத்தை நீக்கும் அல்லது அழிக்கும் அல்லது பெயர்க்குறித்தமர்த்தப்பெற்ற அதிகாரஅமைப்பிற்குத் தெரிவிக்கும் முறை;

(அஅ) **15** ஆம் பிரிவின் **(2)** ஆம் உட்பிரிவின்படி ஒரு சிறாரை உட்படுத்தும் எந்தவொரு வடிவத்திலுமான இழிபொருள் ஓவியம் குறித்துத் தெரிவிக்கும் முறை;.]

---

1. சட்ட எண் 25/2019 இன் 11 ஆம் பிரிவினால் (16—08—2019 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

[1][(ab)] the qualifications and experience of, and the fees payable to, a translator or an interpreter, a special educator or any person familiar with the manner of communication of the child or an expert in that field, under sub-section (4) of section 19; sub-sections(2) and (3) of section 26 and section 38;

(b) care and protection and emergency medical treatment of the child under sub-section (5) of section 19;

(c) the payment of compensation under sub-section (8) of section 33;

(d) the manner of periodic monitoring of the provisions of the Act under sub-section (1) of section 44.

(3) Every rule made under this section shall be laid, as soon as may be after it is made, before each House of Parliament, while it is in session, for a total period of thirty days which may be comprised in one session or in two or more successive sessions, and if, before the expiry of the session immediately following the session or the successive sessions aforesaid, both Houses agree in making any modification in the rule or both Houses agree that the rule should not be made, the rule shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be; so, however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule.

Power to remove difficulties.

46. (1) If any difficulty arises in giving effect to the provisions of this Act, the Central Government may, by order published in the Official Gazette, make such provisions not inconsistent with the provisions of this Act as may appear to it to be necessary or expedient for removal of the difficulty:

1. Clause (a) re-lettered as clause (ab) thereof by Act 25 of 2019, s.11 (w.e.f. 16-08-2019).

[1][(அஆ)] 19 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்படி, 26 ஆம் பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின்படி மொழிபெயர்ப்பாளர் அல்லது வாய்வழி மொழிபெயர்ப்பவர், சிறப்புக் கல்வியாளர் அல்லது சிறாரிடம் தொடர்பு கொள்ளும் முறையை தெரிந்துள்ள நபர் எவரும் அல்லது அத்துறையில் வல்லுநராக இருக்கும் ஒருவரின் தகுதிகள் பட்டறிவு மற்றும் அவர்களுக்கு வழங்கத்தக்கக் கட்டணங்கள்;

(ஆ) 19 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்படி, சிறாரின் உரிய பராமரிப்பு மற்று பாதுகாப்பு மற்றும் அவசரகால மருத்துவ சிகிச்சை;

(இ) 33 ஆம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவின்படி, இழப்பீட்டினை வழங்குதல்;

(ஈ) 44 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி, இந்தச்சட்டத்தின் வகைமுறைகளைக் காலமுறையில் கண்காணிக்கும் முறை.

(3) இந்தப் பிரிவின்படி செய்யப்பட்ட விதி ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், அது முப்பது நாட்களைக் கொண்ட ஒரு கால அளவுக்கு ஒரு கூட்டத்தொடராகவோ, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத்தொடர்களாகவோ அமர்வில் இருக்கையில், அதன் முன்பு வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது உடனடியாகத் தொடர்ந்து வரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த விதியில் மாற்றமைவு எதனையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின் அல்லது அந்த விதி செய்யப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன் பின்பு, அந்தவிதி அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும்; அல்லது நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாது போகும்; எனினும் அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனுடைய செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு அதிகாரம்.

46. (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துகையில் இடர்ப்பாடு எதுவும் எழுமானால், மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்பட்ட ஆணையின் மூலம், இடர்ப்பாட்டினை நீக்குவதற்கு தேவையானது அல்லது உகந்தது என்று அதற்குத் தோன்றலாகும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத வகைமுறைகளைச் செய்யலாம்:

1. சட்ட எண் 25/2019 இன் 11 ஆம் பிரிவினால் கூறு (அ), அதனின் கூறு (அஆ) ஆக (16–08–2019 முதல் செல்திறம் பெறுமாறு) மறு எழுத்திடப்பட்டது.

Provided that no order shall be made under this section after the expiry of the period of two years from the commencement of this Act.

(2) Every order made under this section shall be laid, as soon as may be after it is made, before each House of Parliament.

**வரம்புரையாக:** இந்தச் சட்டம் தொடங்கியதிலிருந்து இரண்டாண்டுகள் காலஅளவு கழிவுற்ற பின்பு, இந்தப் பிரிவின்படி ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

**(2)** இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றும், அது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

## THE SCHEDULE

⌈See section 2(c)⌉

**ARMED FORCES AND SECURITY FORCES CONSTITUTED UNDER**

(a) The Air Force Act, 1950 (45 of 1950);

(b) The Army Act, 1950 (46 of 1950);

(c) The Assam Rifles Act, 2006 (47 of 2006);

(d) The Bombay Home Guard Act, 1947 (3 of 1947);

(e) The Border Security Force Act, 1968 (47 of 1968);

(f) The Central Industrial Security Force Act, 1968 (50 of 1968);

(g) The Central Reserve Police Force Act, 1949 (66 of 1949);

(h) The Coast Guard Act, 1978 (30 of 1978);

(i) The Delhi Special Police Establishment Act, 1946 (25 of 1946);

(j) The Indo-Tibetan Border Police Force Act, 1992 (35 of 1992);

(k) The Navy Act, 1957 (62 of 1957);

(l) The National Investigation Agency Act, 2008 (34 of 2008);

(m) The National Security Guard Act, 1986 (47 of 1986);

(n) The Railway Protection Force Act, 1957 (23 of 1957);

(o) The Sashastra Seema Bal Act, 2007 (53 of 2007);

(p) The Special Protection Group Act, 1988 (34 of 1988);

(q) The Territorial Army Act, 1948 (56 of 1948);

(r) The State police forces (including armed constabulary) constituted under the State laws to aid the civil powers of the State and empowered to employ force during internal disturbances or otherwise including armed forces as defined in clause (a) of section 2 of the Armed Forces (Special Powers) Act, 1958 (28 of 1958).

## இணைப்புப்பட்டியல்

[2 (இ) பிரிவைக் காண்க]

**பின்வருவனவற்றின்படி அமைத்துருவாக்கப்பட்ட ஆயுதப்படைகள் மற்றும் பாதுகாப்புபடைகள்**

| | | |
|---|---|---|
| (அ) | வான்படைச் சட்டம், 1950 | (சட்ட எண் 45/1950); |
| (ஆ) | தரைப்படைச் சட்டம், 1950 | (சட்ட எண் 46 /1950); |
| (இ) | அசாம் துப்பாக்கிப் படைச் சட்டம், 2006 | (சட்ட எண் 47/2006); |
| (ஈ) | பம்பாய் ஊர்க் காவல் படைச் சட்டம், 1947 | (சட்ட எண் 3/1947); |
| (உ) | எல்லைப் பாதுகாப்புப் படைச் சட்டம், 1968 | (சட்ட எண் 47/1968); |
| (ஊ) | மைய தொழிற் பாதுகாப்புப் படைச் சட்டம், 1968 | (சட்ட எண் 50/1968); |
| (எ) | மைய சேமக் காவற் படைச் சட்டம், 1949 | (சட்ட எண் 66/1949); |
| (ஏ) | கடலோர காவற்படைச் சட்டம், 1978 | (சட்ட எண் 30/1978); |
| (ஐ) | தில்லி சிறப்புக் காவற்படை அமைப்புச் சட்டம், 1946 | (சட்ட எண் 25/1946); |
| (ஒ) | இந்திய - திபெத் எல்லைக் காவற்படைச் சட்டம், 1992 | (சட்ட எண் 35/1992); |
| (ஓ) | கடற் படைச் சட்டம், 1957 | (சட்ட எண் 62/1957); |
| (ஔ) | தேசிய புலனாய்வு அமைப்புச் சட்டம், 2008 | (சட்ட எண் 34/2008); |
| (க) | தேசியப் பாதுகாப்புப் படைச் சட்டம், 1986 | (சட்ட எண் 47/1986); |
| (ங) | இருப்பூர்தியப் பாதுகாப்புப் படைச் சட்டம், 1957 | (சட்ட எண் 23/1957); |
| (ச) | எல்லை ஆயுதப்படைச் சட்டம், 2007 | (சட்ட எண் 53/2007); |
| (ஞ) | சிறப்புப் பாதுகாப்பு படைபிரிவுச் சட்டம், 1988 | (சட்ட எண் 34/1988); |
| (ட) | மண்டல ஆயுதப்படைச் சட்டம், 1948 | (சட்ட எண் 56/1948); |
| (ண) | ஆயுதப்படைகள் (சிறப்பு அதிகாரங்கள்) சட்டம், 1958 இன் (சட்ட எண் 28/1958) 2 ஆம் பிரிவின் (அ) கூறில் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான ஆயுதப்படைகள் உள்ளடங்கலாக உள்நாட்டுக் குழப்பங்கள் அல்லது பிறவற்றின் போது மாநில அரசு அதிகாரங்களில் உதவுவதற்கு மற்றும் பணிக்கமர்த்தப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டதும், மாநிலச் சட்டங்களின்படி அமைத்துருவாக்கப்பட்டதுமான (ஆயுதம் தாங்கிய காவல்படை உள்ளடங்கலாக) மாநில காவற்படைகள். | |